AXIS BANK

# மிக முக்கிய விதிமுறைகளும், நிபந்தனைகளும்

மிக முக்கிய விதிமுறைகளும், நிபந்தனைகளும், இங்கு கொடுக்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் அனைத்து கிரெடிட் கார்டுதாரர்கள்/கிரெடிட் கார்டு விண்ணப்பதாரர்கள்/வங்கியின் வாடிக்கையாளர்கள்/உடனடியாக நடைமுறைக்கு வரும் வங்கியின் கிரெடிட் கார்டு தயாரிப்பில் ஆர்வத்தை வெளிப்படுத்தும் பொது மக்கள் ஆகியோருக்குப் பொருந்தும். MITC மாறுதலுக்கு உட்பட்டது. இந்த MITC -ஐ, வங்கியின் கார்டுதாரர் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் சேர்த்துக் கூடுதலாகப் படிக்க வேண்டும்.

## ஏ) கட்டண அட்டவணை

### 1. சேருதல், வருடாந்திர மற்றும் ஆட்-ஆன் கட்டணம்

| கிரெடிட் கார்டு வகை | சேருவதற்கான கட்டணம் (ரூ.) (கார்டை செயல்படுத்திய பிறகு விதிக்கப்படும்)* | 2-வது வருடம் முதல் வருடாந்திரக் கட்டணம் (ரூ.)* | ஆட்-ஆன் கார்டு |
|---|---|---|---|
| *ஆக்ஸிஸ் பேங்க் இன்ஃபினைட்* கிரெடிட் கார்டு | இல்லை | இல்லை | இல்லை |
| *ஆக்ஸிஸ் பேங்க் பஸ்* கிரெடிட் கார்டு | 750 | 750 | இல்லை |
| *இந்தியன் ஆயில் ஆக்ஸிஸ் பேங்க்* கிரெடிட் கார்டு | 500 | 500 | இல்லை |
| *ஃபிளிப்கார்ட் ஆக்ஸிஸ் பேங்க் சூப்பர் எலைட்* கிரெடிட் கார்டு | 500 | 500 | இல்லை |
| *ஃபிளிப்கார்ட் ஆக்ஸிஸ் பேங்க்* கிரெடிட் கார்டு | 500 | 500 | இல்லை |
| *ஆக்ஸிஸ் பேங்க் ஃப்ரீசார்ஜ்* கிரெடிட் கார்டு | 250 | 250 | இல்லை |
| *ஏர்டெல் ஆக்ஸிஸ் பேங்க்* கிரெடிட் கார்டு | 500 | 500 (முந்தைய ஆண்டில் ரூ. 2,00,000 செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| *சாம்சங் ஆக்ஸிஸ் பேங்க் சிக்னேச்சர்* கிரெடிட் கார்டு | 500 | 500 (முந்தைய ஆண்டில் ரூ. 2,00,000 செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| சாம்சங் ஆக்ஸிஸ் பேங்க் *இன்ஃபினைட்* கிரெடிட் கார்டு | 5000 | 5000 (முந்தைய ஆண்டில் ரூ.7,00,000 செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| *ஆக்ஸிஸ் பேங்க் ஃப்ரீசார்ஜ் பிளஸ்* கிரெடிட் கார்டு | 350 | 350 (முந்தைய ஆண்டில் ரூ. 50000 செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| ஏஸ் கிரெடிட் கார்டு | 499 (கார்டு செட்-அப் செய்த 45 நாட்களுக்குள் ரூ.10000 செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | 499 (முந்தைய ஆண்டில் ரூ. 2,00,000 செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | இல்லை |

| | | | |
|---|---|---|---|
| *ஸ்பைஸ்ஜெட் ஆக்ஸிஸ் பேங்க் வோயேஜ்* கிரெடிட் கார்டு | 750 | 750 | இல்லை |
| *ஸ்பைஸ்ஜெட் ஆக்ஸிஸ் பேங்க் வோயேஜ் பிளாக்* கிரெடிட் கார்டு | 2,000 | 2,000 | இல்லை |
| *செலக்ட்* கிரெடிட் கார்டு | 3,000 (பர்கண்டி கணக்குதாரர்களுக்கு இல்லை) | 3,000 (பர்கண்டி கணக்குதாரர்களுக்கு இல்லை) | இல்லை |
| *ஆக்ஸிஸ் பேங்க் அட்லஸ்* கிரெடிட் கார்டு | 5,000 | 5,000 | இல்லை |
| *பர்கண்டி பிரைவேட்* கிரெடிட் கார்டு | 50,000 (பர்கண்டி பிரைவேட் கணக்குதாரர்களுக்கு இல்லை) | 50,000 (பர்கண்டி பிரைவேட் கணக்குதாரர்களுக்கு இல்லை) | இல்லை |
| *ரிசர்வ்* கிரெடிட் கார்டு | 50,000 | 50,000 (முந்தைய ஆண்டில் ரூ. 35,00,000 தகுதியான செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| *மேக்னஸ்* கிரெடிட் கார்டு | 12,500 | 12,500 (முந்தைய ஆண்டில் ரூ. 25,00,000 தகுதிபெறும் செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| *மேக்னஸ் ஃபார் பர்கண்டி* கிரெடிட் கார்டு# | 30,000# | 30,000# (முந்தைய ஆண்டில் ரூ. 30,00,000 தகுதிபெறும் செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | இல்லை # |
| *ஆக்ஸிஸ் பேங்க் விஸ்டாரா இன்ஃபினைட்* கிரெடிட் கார்டு | 10,000 | 10,000 | இல்லை |
| *ஆக்ஸிஸ் பேங்க் விஸ்டாரா சிக்னேச்சர்* கிரெடிட் கார்டு | 3,000 | 3,000 | இல்லை |
| *ஆக்ஸிஸ் பேங்க் விஸ்டாரா* கிரெடிட் கார்டு | 1,500 | 1,500 | இல்லை |
| *பிரிவில்லேஜ்* கிரெடிட் கார்டு | 1,500 | 1,500 | இல்லை |
| *மைல்ஸ் & மோர் ஆக்ஸிஸ் பேங்க் வேர்ல்டு செலக்ட்* கிரெடிட் கார்டு | 10,000 | 4,500 | இல்லை |
| *மைல்ஸ் & மோர் ஆக்ஸிஸ் பேங்க் வேர்ல்டு* கிரெடிட் கார்டு | 3,500 | 3,500 | இல்லை |
| *நியோ* கிரெடிட் கார்டு | 250 | 250 | இல்லை |
| *ஆரா* கிரெடிட் கார்டு | 749 | 749 | இல்லை |
| *LIC* கிரெடிட் கார்டுகள் | இல்லை | இல்லை | இல்லை |

| | | | |
|---|---|---|---|
| பயணப் பலன்களுடன் *சிக்னேச்சர்* கிரெடிட் கார்டு | 1,500 | 1,000 (முந்தைய ஆண்டில் ரூ. 2.4 இலட்சம் செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டது) | இல்லை |
| *மை விங்ஸ்* கிரெடிட் கார்டு | 1,200 | 500 | இல்லை |
| *மை சாய்ஸ்* கிரெடிட் கார்டு | 250 (இமேஜ் கார்டுக்கு கூடுதல் கட்டணம் ரூ. 150) | 250 | இல்லை |
| *மை ஜோன்* கிரெடிட் கார்டு | 500 | 500 | இல்லை |
| *பிளாட்டினம்* கிரெடிட் கார்டு | 500 (கார்டு செட்-அப் செய்யப்பட்ட 45 நாட்களுக்குள் ரூ. 5,000 செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | 200 (முந்தைய ஆண்டில் ரூ. 1,00,000 செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| *டைட்டானியம்* கிரெடிட் கார்டு | 250 (கார்டு செட்-அப் செய்யப்பட்ட 45 நாட்களுக்குள் ரூ. 2,500 செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | 100 (முந்தைய ஆண்டில் ரூ. 50,000 செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| *பிரைடு பிளாட்டினம்* கிரெடிட் கார்டு | இல்லை | 250 (முந்தைய ஆண்டில் ரூ. 20,000 செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| *பிரைடு சிக்னேச்சர்* கிரெடிட் கார்டு | இல்லை | 500 (முந்தைய ஆண்டில் ரூ. 40,000 செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| *ரிவார்ட்ஸ்* கிரெடிட் கார்டு | 1000 | 1000 (முந்தைய ஆண்டில் ரூ. 2,00,000 செலவழித்தலின் மீது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) | இல்லை |
| *க்விக்* கிரெடிட் கார்டு | இல்லை | இல்லை | இல்லை |

| | | | |
|---|---|---|---|
| *ஃபைப்* ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு | இல்லை | இல்லை | இல்லை |

கவனிக்கவும் - வருடாந்திரக் கட்டணத் தள்ளுபடியைப் பெறுவதற்குக் கணக்கிடப்படும் செலவினங்களுக்கு வாடகைப் பரிவர்த்தனைகள் (MCC 6513) மற்றும் வாலட் லோட் பரிவர்த்தனைகள் (MCC 6540) ஆகியவை தகுதிபெறாது.
*ரிசர்வ் மற்றும் மேக்னஸ் கிரெடிட் கார்டுகளைப் பொறுத்த வரையில், வாடகைப் பரிவர்த்தனைகள் (MCC 6513), வாலட் லோடு பரிவர்த்தனைகள் (MCC 6540), யுட்டிலிட்டி பரிவர்த்தனைகள் (MCC 4814, 4816, 4899, 4900), அரசு நிறுவனப் பரிவர்த்தனைகள் (MCC 9222, 9311, 9399, 9402), EMI -ஆக மாற்றுதல்கள், பணம் எடுத்தல், ரத்து செய்தல் மற்றும் கட்டணம் மற்றும் கட்டண விதிப்புகள் ஆகியவை வருடாந்திரக் கட்டணத் தள்ளுபடிக் கணக்கீட்டிற்குத் தகுதிபெறாது.

#தேவைப்படும் தனிப்பட்ட பர்கண்டி உறவைப் பராமரிக்கும் பர்கண்டி வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே பொருந்தும். கூடுதல் விவரங்களுக்கு, https://www.axisbank.com/Magnus-ஐப் பார்வையிடவும். மேக்னஸ் ஃபார் பர்கண்டி கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பிப்பதன் மூலம், தேவையான பர்கண்டியின் 'மொத்த உறவு மதிப்பு' அளவுகோலை வாடிக்கையாளர் பராமரிக்கவில்லை என்றால், பர்கண்டிக்கான மேக்னஸ் கிரெடிட் கார்டுக்காக புதிய மேக்னஸ் கிரெடிட் கார்டை மாற்றுகின்ற வங்கியின் கொள்கையையும் ஏற்றுக் கொள்கிறீர்கள். புதிய மேக்னஸ் கிரெடிட் கார்டுக்கும் சேருதல் மற்றும் ஆண்டுக் கட்டணமாக ரூ. 12,500++ விதிக்கப்படும்.

## 2. நிதி / வட்டிக் கட்டணம் (ஜூன் 12, 2021 முதல்)

| ஆக்ஸிஸ் பேங்க் கார்டின் வகை | நீட்டிக்கப்பட்ட கடன் மீதான ஓவர்டியூ வட்டி | | பண அட்வான்ஸ்கள் மீதான வட்டி | |
|---|---|---|---|---|
| | மாதாந்திர விகிதம் | வருடாந்திர விகிதம் | மாதாந்திர விகிதம் | வருடாந்திர விகிதம் |
| *பர்கண்டி பிரைவேட்* கிரெடிட் கார்டு | மாதத்திற்கு 1.5% | ஆண்டுக்கு 19.56% | மாதத்திற்கு 1.5% | ஆண்டுக்கு 19.56% |
| *பிரைடு பிளாட்டினம்* கிரெடிட் கார்டு, *பிரைடு சிக்னேச்சர்* கிரெடிட் கார்டு | மாதத்திற்கு 2.95% | ஆண்டுக்கு 41.75% | மாதத்திற்கு 2.95% | ஆண்டுக்கு 41.75% |
| *பிரிவில்லேஜ்* கிரெடிட் கார்டு/ *செலக்ட்* கிரெடிட் கார்டு/ஆக்ஸிஸ் பேங்க் *அட்லஸ்* கிரெடிட் கார்டு/ *மைல்ஸ்* & *மோர்* ஆக்ஸிஸ் பேங்க் *வேர்ல்டு செலக்ட்* கார்டு/ *மை ஜோன்* கிரெடிட் கார்டு/*மை சாய்ஸ்* கிரெடிட் கார்டு/ *மை விங்க்ஸ்* கிரெடிட் கார்டு / ஆக்ஸிஸ் பேங்க் *சிக்னேச்சர் விஸ்டாரா* கிரெடிட் கார்டு/ ஆக்ஸிஸ் பேங்க் *விஸ்டாரா* கிரெடிட் கார்டு / *பிளாட்டினம்* கிரெடிட் கார்டு / | மாதத்திற்கு 3.6% | ஆண்டுக்கு 52.86% | மாதத்திற்கு 3.6% | ஆண்டுக்கு 52.86% |

| | | | | |
|---|---|---|---|---|
| *டைட்டானியம்* கிரெடிட் கார்டு / *நியோ* கிரெடிட் கார்டு / ஆக்ஸிஸ் பேங்க் *பஸ்* கிரெடிட் கார்டு / *விசா கோல்டு* கிரெடிட் கார்டு / *விசா சில்வர்* கிரெடிட் கார்டு / *இந்தியன் ஆயில்* ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு / ஆக்ஸிஸ் பேங்க் *விஸ்டாரா இன்ஃபினைட்* கிரெடிட் கார்டு/ *ஆரா* கிரெடிட் கார்டு/ *LIC* கிரெடிட் கார்டுகள்/ *ரிவார்ட்ஸ்* கிரெடிட் கார்டு/ *க்விக்* கிரெடிட் கார்டு | | | | |
| *ரிசர்வ்* கிரெடிட் கார்டு / *மேக்னஸ்* கிரெடிட் கார்டு / *மேக்னஸ் ஃபார் பர்கண்டி* கிரெடிட் கார்டு | மாதத்திற்கு 3.0% | ஆண்டுக்கு 42.58% | மாதத்திற்கு 3.0% | ஆண்டுக்கு 42.58% |
| *ஃபிளிப்கார்ட்* ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு/*ஃபிளிப்கார்ட்* ஆக்ஸிஸ் பேங்க் *சூப்பர் எலைட்* கிரெடிட் கார்டு/ ஆக்ஸிஸ் பேங்க் *ஃப்ரீசார்ஜ்* கிரெடிட் கார்டு/ ஆக்ஸிஸ் பேங்க் *ஃப்ரீசார்ஜ் பிளஸ்* கிரெடிட் கார்டு/ *ஏஸ்* கிரெடிட் கார்டு/ *ஏர்டெல்* ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு/ *ஸ்பைஸ்ஜெட்* ஆக்ஸிஸ் பேங்க் *வோயேஜ்* கிரெடிட் கார்டு/ *ஸ்பைஸ்ஜெட்* ஆக்ஸிஸ் பேங்க் *வாயேஜ் பிளாக்* கிரெடிட் கார்டு / *சாம்சங்* ஆக்ஸிஸ் பேங்க் *சிக்னேச்சர்* கிரெடிட் கார்டு / *சாம்சங்* ஆக்ஸிஸ் பேங்க் *இன்ஃபினைட்* கிரெடிட் கார்டு/ *ஃபைப்* ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு | மாதத்திற்கு 3.6% | ஆண்டுக்கு 52.86% | மாதத்திற்கு 3.6% | ஆண்டுக்கு 52.86% |
| *செக்யூர்டு கோல்டு* கிரெடிட் கார்டு / *செக்யுர்டு சில்வர்* கிரெடிட் கார்டு / *பிளாட்டினம் செக்யூர்டு* கிரெடிட் கார்டு / *இன்ஸ்டா ஈஸி* கிரெடிட் கார்டு / *மை ஸோன் ஈஸி* கிரெடிட் கார்டு / *பிரீவிலேஜ் ஈஸி* கிரெடிட் கார்டு / ஆக்ஸிஸ் பேங்க் *ஃப்ளிப்கார்ட் செக்யூரிட்* கார்ட் | மாதத்திற்கு 3.4% | ஆண்டுக்கு 49.36% | மாதத்திற்கு 3.4% | ஆண்டுக்கு 49.36% |

## நிதி / வட்டிக் கட்டண விவரங்கள்:

1) பின்வருமாறு வட்டி வசூலிக்கப்படும்;
    - பேமெண்ட் தவணைத் தேதிக்குள் மொத்த நிலுவைத் தொகையைச் செலுத்தவில்லை என்றால், மொத்த நிலுவைத் தொகை மற்றும் அனைத்து புதிய பரிவர்த்தனைகளுக்கும் (பரிவர்த்தனை தேதியிலிருந்து) முந்தைய நிலுவைத் தொகைகள் முழுமையாகச் செலுத்தப்படும் வரை வட்டி விதிக்கப்படும்.
    - அனைத்துப் பண அட்வான்ஸ்களுக்கும் பணம் எடுத்த தேதியில் இருந்து பேமெண்ட் தேதி வரை.
    - பேமெண்ட் தவணைத் தேதிக்குப் பிறகும் குறைந்தபட்ச நிலுவைத் தொகையைச் செலுத்தவில்லை என்றால், தாமத பேமெண்ட் கட்டணம் / வட்டி விதிக்கப்படும்.
    - மற்ற கிரெடிட் கார்டு கணக்குகளில் இருந்து இருப்பு மாற்றப்படும் பட்சத்தில், வங்கியாளரின் காசோலை / NEFT வழங்கப்பட்ட தேதியிலிருந்து மாற்றப்பட்ட தொகைக்கும், உங்கள் கார்டு கணக்கில்

நிலுவையில் உள்ள ஏதேனும் கொள்முதல் தொகைக்கும் உடனடியாக நிதிக் கட்டணங்கள் விதிக்கப்படும்.

கார்டு கணக்கு மூடப்பட்ட பிறகும் கூட, கார்டில் உள்ள நிலுவைத் தொகையை முழுமையாகச் செலுத்தும் வரை, மேற்கண்ட நிதிக் கட்டணங்கள் தொடர்ந்து விதிக்கப்படும்.

## 2) **பிற கட்டணங்கள் மற்றும் கட்டண விதிப்புகள்**

| | |
|---|---|
| பணம் எடுப்பதற்கான கட்டணம்** | பணத்தின் தொகையில் 2.5% (குறைந்தபட்சம் ரூ. 500).; *பர்கண்டி பிரைவேட்* கிரெடிட் கார்டு, *ரிசர்வ்* கிரெடிட் கார்டு, *மேக்னஸ்* கிரெடிட் கார்டு மற்றும் *மேக்னஸ் பர்கண்டி* கிரெடிட் கார்டு ஆகியவற்றுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது |
| கிளைகளில் செய்யப்படும் ரொக்க பேமெண்ட்களுக்கான கட்டணம் (ரொக்க பேமெண்ட்களுக்கான தினசரி வரம்பு ரூ. 50,000) | ரூ. 100; *பர்கண்டி பிரைவேட்* கிரெடிட் கார்டு மற்றும் *இன்ஸ்டா ஈஸி* கிரெடிட் கார்டுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது |
| நகல் ஸ்டேட்மெண்ட் கட்டணம் | தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது |
| *பர்கண்டி பிரைவேட்* கிரெடிட் கார்டுக்குத் தாமத பேமெண்ட்டிற்கான கட்டணம் | தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது |
| மற்ற கிரெடிட் கார்டுகள் அனைத்திற்கும் தாமத பேமெண்ட்டிற்கான கட்டணம் | செலுத்த வேண்டிய மொத்த பேமெண்ட் நிலுவை ரூ. 500 -க்குள் இருந்தால் பூஜ்ஜியம் |
| | செலுத்த வேண்டிய மொத்த பேமெண்ட் நிலுவை ரூ. 501 முதல் ரூ. 5,000 -க்குள் இருந்தால் ரூ. 500 |
| | செலுத்த வேண்டிய மொத்த பேமெண்ட் நிலுவை ரூ. 750 முதல் ரூ. 10,000 -க்குள் இருந்தால் ரூ. 750 |
| | செலுத்த வேண்டிய மொத்த பேமெண்ட் நிலுவை ரூ.10,000 -க்கு மேல் இருந்தால் ரூ. 1200 |
| பிற ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டுகளுக்கான ஓவர்-லிமிட் அபராதம்*** | ஓவர்-லிமிட் தொகையில் 2.5% (குறைந்தது ரூ. 500) *பர்கண்டி பிரைவேட்* கிரெடிட் கார்டுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது |
| கட்டண ஸ்லிப் மீட்டெடுப்புக் கட்டணம் அல்லது நகல் கோரிக்கைக் கட்டணம் | தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது |
| வெளியூர் காசோலைக் கட்டணம் | தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது |
| காசோலை ரிட்டர்ன் அல்லது பணம் வழங்க மறுத்தல் கட்டணம் அல்லது ஆட்டோ டெபிட்டை ரத்து செய்தல் (வங்கிக் கணக்கில் போதிய தொகை இல்லை) | குறைந்தது ரூ.450, அதிகபட்சமாக ரூ. 1500 என்ற அளவிற்கு உட்பட்டு பேமெண்ட் தொகையில் 2%. பர்கண்டி பிரைவேட் கிரெடிட் கார்டுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது |
| ரயில்வே டிக்கெட்டுகளை வாங்குவதற்கு அல்லது ரத்து செய்வதற்கான ஸர்சார்ஜ் | IRCTC / இந்தியன் இரயில்வேயின் பரிந்துரைக்கேற்ப |

| | |
|---|---|
| எரிபொருள் பரிவர்த்தனைக்கான ஸர்சார்ஜ் | பரிவர்த்தனை தொகையில் 1%<br>(ரூ. 400 முதல் ரூ. 4,000 வரையிலான எரிபொருள் பரிவர்த்தனைகளுக்கு ரீ:பண்டு செய்யப்படுகிறது ஒரு ஸ்டேட்மெண்ட் சுழற்சிக்கான அதிகபட்ச பலன்கள் ரூ. 400 ஆகும். இதில் *ஏஸ்* கிரெடிட் கார்டு, *சாம்ஸங் ஆக்ஸிஸ் பேங்க் சிக்னேச்சர்* கிரெடிட் கார்டு மற்றும் *ஏர்டெல் ஆக்ஸிஸ் பேங்க்* கிரெடிட் கார்டு ஆகியவற்றுக்கு ரூ.500 வரை; *பிரைட் பிளாட்டினம்* கிரெடிட் கார்டு மற்றும் *ஆக்ஸிஸ் பேங்க் ஆரா* கிரெடிட் கார்டுக்கு ரூ.250 வரை மட்டும். *மை சாய்ஸ்* கிரெடிட் கார்டு, *நியோ* கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் *பஸ்* கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் *விஸ்டாரா* கிரெடிட் கார்டு மற்றும் ஆக்ஸிஸ் பேங்க் *விஸ்டாரா சிக்னேச்சர்* கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் *:ப்ரீசார்ஜ்* கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் *:ப்ரீசார்ஜ் பிளஸ்* கிரெடிட் கார்டு ஆகியவற்றுக்கு ரீ:பண்டு பொருந்தாது); பரிவர்த்தனைத் தொகையில் 1% (ரூ. 400 முதல் ரூ. 5,000 வரையிலான எரிபொருள் பரிவர்த்தனைகளுக்கு ரீ:பண்டு செய்யப்படுகிறது) ஆக்ஸிஸ் பேங்க் *இன்:பினைட்* கிரெடிட் கார்டுக்கு, ஒரு ஸ்டேட்மெண்ட் சுழற்சிக்கு அதிகபட்சமாக ரூ. 500 பலன்கள் கிரெடிட் கார்டு); பரிவர்த்தனை தொகையில் 1% (ரூ. 400 முதல் ரூ. 5,000 வரையிலான எரிபொருள் பரிவர்த்தனைகளுக்கு ரீ:பண்டு செய்யப்படும். ரிவார்ட்ஸ் கிரெடிட் கார்டுக்கு, ஒரு ஸ்டேட்மென்ட் சுழற்சிக்கு அதிகபட்சமாக ரூ. 400 வரை பலன்கள்<br><br>கவனத்தில் கொள்ளவும் -<br>• எரிபொருள் பரிவர்த்தனைகளில், கார்டு வழங்கும் வங்கி எரிபொருள் சர்சார்ஜ் விதிக்காது<br>• குறிப்பிட்ட சில எரிபொருள் பரிவர்த்தனைகளில், 1% + GST -க்குப் பதிலாக ரூ. 10 + GST என்று எரிபொருள் சர்சார்ஜ் விதிக்கப்படக் கூடும். வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் எரிபொருள் ஸர்சார்ஜ் தள்ளுபடியானது, எவ்வளவு ஸர்சார்ஜ் விதிக்கப்பட்டாலும் கிரெடிட் கார்டில் உள்ள தகுந்த மதிப்புக் கூற்று/அம்சத்திற்கேற்பவே இருக்கும்.<br>• எரிபொருள் ஸர்சார்ஜ் மீது விதிக்கப்படும் வரிகள் (ஏதேனும் இருந்தால்) தள்ளுபடி செய்யப்படாது, அதைக் கார்டுதாரரே செலுத்த வேண்டும். |
| *எட்ஜ் ரிவார்டு* பாயிண்ட்கள் மீட்புக் கட்டணம் | 300-க்கும் குறைவாக ரிவார்டு பாயிண்ட்கள் ரெடீம் செய்யப்பட்டு இருந்தால், இல்லை. |
| | 300 முதல் 10,000 வரை ரிவார்டு பாயிண்ட்கள் ரெடீம் செய்யப்பட்டு இருந்தால், ரூ. 49 |
| | 10,000 -க்கு மேல் ரிவார்டு பாயிண்ட்கள் ரெடீம் செய்யப்பட்டு இருந்தால், ரூ. 99 |
| | *செலக்ட்* கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் *அட்லஸ்* கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் *சிக்னேச்சர்* கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் *இன்:பினைட்* கிரெடிட் கார்டு, *பிரிவிலேஜ்* கிரெடிட் கார்டு, *மேக்னஸ்* கிரெடிட் கார்டு, *மேக்னஸ் :பார் பர்கண்டி* கிரெடிட் கார்டு, *ரிசர்வ்* கிரெடிட் கார்டு, *பர்கண்டி பிரைவேட்* கிரெடிட் கார்டு, *சாம்சங்* ஆக்ஸிஸ் பேங்க் *இன்:பினைட்* கிரெடிட் கார்டு, *ரிவார்ட்ஸ்* கிரெடிட் கார்டு, *பிரையாரிட்டி பிளாட்டினம்* |

| | |
|---|---|
| | டெபிட் கார்டு, *பர்கண்டி* டெபிட் கார்டு, *பர்கண்டி பிரைவேட்* டெபிட் கார்டு, ரூபே *பிளாட்டினம் NRO* டெபிட் கார்டு, *பர்கண்டி NRO* டெபிட் கார்டு அல்லது பர்கண்டி பிரைவேட் NRO டெபிட் கார்டு வைத்திருப்பவர்களுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது |
| அந்நியச் செலவாணி பரிவர்த்தனைக் கட்டணம்**** | *மேக்னஸ்* கிரெடிட் கார்டு மற்றும் *மேக்னஸ் ஃபார் பர்கண்டி* கிரெடிட் கார்டுக்கு, பரிவர்த்தனை மதிப்பில் 2%; ரிசர்வ் கிரெடிட் கார்டுக்கு, பரிவர்த்தனை மதிப்பில் 1.5%; *பர்கண்டி பிரைவேட்* கிரெடிட் கார்டுக்கு இல்லை; மற்ற கார்டுகள் அனைத்திற்கும், பரிவர்த்தனை மதிப்பில் 3.50% |
| *டைனமிக் செலவாணி மாற்றம் மார்க்அப் *****<br>(மார்ச் 5, 2023 முதல் பொருந்தும்) | வெளிநாட்டில் இந்திய நாணயத்தில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சர்வதேச பரிவர்த்தனைக்கும் அல்லது இந்தியாவிலுள்ள, ஆனால் வெளிநாட்டில் பதிவுசெய்துள்ள வணிகர்களுடன் இந்திய நாணயத்தில் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளுக்கு 1% மற்றும் வரிகள் பொருந்தும்.<br>*பர்கண்டி பிரைவேட்* கிரெடிட் கார்டுக்கு இல்லை; |
| *வாடகைப் பரிவர்த்தனைக் கட்டணம்******<br>(மார்ச் 5, 2023 முதல் பொருந்தும்) | ஒவ்வொரு வாடகைப் பரிவர்த்தனைக்கும், அதிக பட்சமாக ரூ.1,500 வரையிலான 1% கட்டணம் பொருந்தும். இந்திய அரசால் அறிவிக்கப்படுவதற்கேற்ப வரிகள் பொருந்தும். |
| பரிவர்த்தனைகளுக்கான மொபைல் அலர்ட்கள் | தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது |
| ஹாட் லிஸ்டிங் கட்டணங்கள் | தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது |
| இருப்பு விசாரணைக் கட்டணங்கள் | தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது |
| மாற்றுதல் கட்டணம் | தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது |

குறிப்பு:

i) அனைத்துக் கட்டணங்கள், வட்டி மற்றும் பிற கட்டணங்களுக்கு இந்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள GST பொருந்தும், மேலும் அது இந்திய அரசின் தொடர்புடைய விதிமுறைகளுக்கேற்ப மாற்றத்திற்கு உட்பட்டதாகும்.

ii) குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்பு தகுந்த அறிவிப்பை வாடிக்கையாளருக்கு வழங்கிய பிறகு, அவ்வப்போது ஏதேனும் கட்டணங்கள் அல்லது விதிப்புகளை மாற்றுவதற்கு அல்லது பொருத்தமானது எனக் கருதும் ஏதேனும் புதிய கட்டண விதிப்புகள் அல்லது கட்டணங்களை அறிமுகப்படுத்துவதற்கான உரிமை வங்கிக்கு உள்ளது.

***தாமத பேமண்ட்டிற்கான கட்டணம்:** பேமெண்ட் செலுத்தாமல் இருந்தாலோ அல்லது பேமெண்ட்டிற்கான குறைந்தபட்ச நிலுவைத் தொகையை விடக் குறைவாகப் பேமெண்ட் செலுத்தினாலோ, கார்டுதாரருக்கு தாமத பேமெண்ட்டிற்கான கட்டணம் விதிக்கப்படும். தாமத

பேமெண்ட்டிற்கான கட்டணத்தைத் தவிர்க்க, பேமெண்ட் தவனைத் தேதியில் அல்லது அதற்கு முன்னர் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு கணக்கில் தேவையான தொகையை வரவு வைக்க வேண்டும்.

குறிப்பு: ஜனவரி 20, 2023 முதல் தாமத பேமெண்ட்டிற்கான கட்டணங்கள் நிலுவைத் தொகைக்கு (தவணைத் தேதிக்கு முன்னர் செலுத்தப்படும் பேமெண்ட்களை கழித்தது போக உள்ள தொகை) மட்டுமே விதிக்கப்படும், மொத்தத் தொகைக்கு அல்ல.

****பணம் எடுப்பதற்கான கட்டணம்:** கூறப்பட்டுள்ள ATM-களில் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டின் இணக்கத்தன்மைக்கு ஏற்ப, கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பிக்கும் போது கார்டு உரிமையாளர்கள் தேர்ந்தெடுத்த பயன்பாட்டு விருப்பத்தைப் பொறுத்து, இந்தியா அல்லது வெளிநாடுகளில் உள்ள ATM -களில் பணம் எடுப்பதற்கு ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டை அவர்கள் பயன்படுத்தலாம். மேலே கூறப்பட்டுள்ள கட்டணங்களுக்கேற்ப பரிவர்த்தனைக் கட்டணம் விதிக்கப்படும். கார்டுதாரர்களின் அடுத்த ஸ்டேட்மெண்ட்டில் அது பில்லிங் செய்யப்படும். இந்தக் கட்டணங்கள் வங்கிக் கட்டணங்கள் மட்டுமே. சில குறிப்பிட்ட ATM -கள் வங்கியுடன் தொடர்பில்லாத பணம் எடுப்பதற்கான கட்டணங்களை விதிக்கும்.

*****ஓவர்-லிமிட் கட்டணம்:** கடன் லிமிட் தொகையை விட அதிகமான குறிப்பிட்ட சில பரிவர்த்தனைகளுக்கு வங்கி ஒப்புதல் அளிக்கலாம், அந்த ஓவர்-லிமிட் தொகை மீது 2.5% (குறைந்தது ரூ.500) ஓவர்-லிமிட் கட்டணம் வசூலிக்கப்படும். கட்டணங்கள் அல்லது வட்டி விதிப்புகள் காரணமாக ஓவர்-லிமிட் நிலை ஏற்படலாம். ஓவர் லிமிட் வசதியைப் பயன்படுத்துவதற்கான கார்டுதாரரின் வெளிப்படையான ஒப்புதலை வங்கி பெறும். இருப்பினும், கார்டுதாரரின் வெளிப்படையான ஒப்புதலைப் பெறாத போதும், அனுமதிக்கப்பட்ட கடன் லிமிட்டை விட அதிகமாகப் பயன்படுத்தும் சூழ்நிலைகள் ஏற்படக் கூடும்.

******அந்நியச் செலவாணியில் கட்டணங்கள்:** இந்திய ரூபாயைத் தவிர்த்து வேறு நாணயத்தில் பரிவர்த்தனை செய்தால், அந்தப் பரிவர்த்தனையானது இந்திய ரூபாய்க்கு மாற்றப்படும். இவ்வாறு மாற்றுவது ஆக்ஸிஸ் பேங்க்கில் அந்தப் பரிவர்த்தனை தீர்வு செய்யப்பட்ட தேதியில் நடைபெறும், அது அந்தப் பணப் பரிமாற்றம் செய்யப்பட்ட தேதியாக இல்லாமல் இருக்கலாம். அமெரிக்க டாலரில் பரிவர்த்தனை செய்யவில்லை என்றால், விதிக்கப்படும் தொகையை அமெரிக்க டாலராக மாற்றி, பின்னர் அமெரிக்க டாலர் தொகையை இந்திய ரூபாயாக மாற்றுவதன் மூலம் அது மாற்றப்படும். பொருந்தக்கூடிய சட்டத்தின்படி ஒரு குறிப்பிட்ட விகிதம் தேவைப்படவில்லை என்றால், சூழ்நிலைக்கேற்ப, அத்தகைய பரிவர்த்தனைகளில் செட்டில்மெண்ட் தேதியில், செலவாணி மாற்றக் காரணி மதிப்பீட்டால் (தற்போது 3.50%) அதிகரிக்கலாம் என்பதால் அமெரிக்க டாலரில் இருந்து இந்திய ரூபாயாக மாற்றும் விகிதமானது, விசா / மாஸ்டர் கார்டு வழங்கும் விகிதத்தில் இருக்கும்.

வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்படும் அத்தகைய வெளிநாட்டு பரிவர்த்தனையின் ரீ ஃபண்டுக்கு, கூடுதலாக 3.5% கட்டணம் விதிக்கப்படும்.

*******டைனமிக் செலவாணி மாற்றுதல் மார்க்-அப்:** DCC மூலம், வாடிக்கையாளர் இந்திய நாணயத்தைப் பயன்படுத்தி சர்வதேசப் பரிவர்த்தனையை மேற்கொள்ளலாம். ஆனாலும் கூட, ஒரு வெளிநாட்டு வணிகருக்கு இந்திய ரூபாயில் பணம் செலுத்தும் போது, அந்த பரிவர்த்தனை தொகை மீது DCC மார்க்-அப் கட்டணமாக 1% மற்றும் வரிகள் விதிக்கப்படும். POS மூலமாக அல்லது ஆன்லைன் மூலமாக, வெளிநாட்டிலோ அல்லது இந்தியாவிலுள்ள, ஆனால் வெளிநாட்டில் பதிவுசெய்யப்பட்ட வணிகருடனோ மேற்கொள்ளப்படும் சர்வதேசப் பரிவர்த்தனைகளுக்கு DCC பொருந்தும். எடுத்துக்காட்டு - நீங்கள் வெளிநாட்டில் உள்ள கடையில் பொருள் வாங்கி விட்டு, POS இயந்திரத்தில் இந்திய ரூபாயில் உங்கள் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி பணம் செலுத்தினால், DCC மார்க்-அப் கட்டணமாக அந்தப் பரிவர்த்தனைத் தொகையில் 1% மற்றும் வரிகளும் விதிக்கப்படும். அதே போன்று, இந்தியாவில் உள்ள, ஆனால் வெளிநாட்டில் பதிவுசெய்துள்ள ஒரு வணிகரிடம் கொள்முதல் செய்து, உங்கள் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி இந்திய ரூபாயில் நீங்கள்

பணம் செலுத்தினால், DCC மார்க்-அப் கட்டணமாக அந்தப் பரிவர்த்தனைத் தொகையில் 1% மற்றும் வரிகள் விதிக்கப்படும்.

******வாடகைப் பரிவர்த்தனை கட்டணம்: MCC 6513 மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு வாடகை பேமெண்ட்டிற்கும், அதிகபட்சமாக ரூ 1,500 வரையில் அந்தப் பரிவர்த்தனைத் தொகையில் 1% வாடகை ஸர்சார்ஜ் விதிக்கப்படும். இந்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு வரிகள் பொருந்தும். உதாரணத்திற்கு - உங்கள் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி, ஒரு மூன்றாம் தரப்பினரின் வாடகை பேமெண்ட் தளத்தில் 20,000 ரூபாயை நீங்கள் செலுத்துகிறீர்கள் என்றால், அந்தப் பரிவர்த்தனைத் தொகையில் 1%, அதாவது 200 ரூபாய் மற்றும் வரிகள் ஸர்சார்ஜாக விதிக்கப்படும். உங்கள் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி, ஒரு மூன்றாம் தரப்பினரின் வாடகைப் பேமண்ட் தளத்தில் 2,00,000 ரூபாயை நீங்கள் செலுத்துகிறீர்கள் என்றால், வாடகை சர்சார்ஜ் 1,500 ஆக நிர்ணயிக்கப்பட்டு உடன் வரிகளும் செலுத்த வேண்டும்.

## ஏ) வட்டியைக் கணக்கிடுவதற்கான எடுத்துக்காட்டு:

நீங்கள் முந்தைய நிலுவைத் தொகைகள் அனைத்தையும் முழுமையாகச் செலுத்தி விட்டீர்கள், உங்கள் கிரெடிட் கார்டு கணக்கில் எந்தத் தொகையும் நிலுவையில் இல்லை, ஒவ்வொரு மாதமும் 20 ஆம் தேதி உங்கள் மாதாந்திர ஸ்டேட்மெண்ட் உருவாக்கப்படும் என்று வைத்துக் கொள்வோம். செப்டம்பர் 12 அன்று ரூ.25000 -க்கு வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கியுள்ளீர்கள், செப்டம்பர் 15 அன்று ATM -இல் ரூ. 5,000 எடுத்துள்ளீர்கள்.

| தேதி | பரிவர்த்தனை வகை | தொகை | விளக்கம் |
|---|---|---|---|
| செப்டம்பர் 12 | கொள்முதல் | Rs.25,000 Dr | கிரெடிட் கார்டில் கொள்முதல் செய்தது |
| செப்டம்பர் 15 | பணம் எடுத்தல் | Rs.5,000 Dr | கிரெடிட் கார்டில் பணம் எடுத்தது |
| செப்டம்பர் 15 | பணப் பரிவர்த்தனைக் கட்டணம் | Rs.500 Dr | 5000*2.5% = ரூ. 125, இது ரூ. 500 -ஐ விடக் குறைவு |
| செப்டம்பர் 20 | வட்டி | Rs.35.50 Dr | பணம் எடுத்தது ரூ. 5,000* 6 நாட்கள்* 3.6%*12 மாதங்கள்/365 நாட்கள் = ரூ. 35.50 |
| செப்டம்பர் 20 | வட்டி மீதான GST | Rs.6.39 Dr | 35.50*18% = Rs.6.39 |
| செப்டம்பர் 20 | கட்டணம் மீதான GST | Rs.90.00 Dr | 500*18% = Rs.90 |
| இறுதி இருப்பு | | **Rs.30,631.89 Dr** | மொத்த பேமெண்ட் நிலுவை |

செப்டம்பர் 20 ஸ்டேட்மெண்ட்டுக்கான உங்கள் தவணைத் தேதி அக்டோபர் 10 ஆகும். அக்டோபர் 10 இல் நீங்கள் ரூ.5000 செலுத்தி, அக்டோபர் 11 இல் புதிதாக ரூ.

10,000 -க்குக் கொள்முதல் செய்தால், அக்டோபர் 20 இல் உருவாக்கப்படும் உங்கள் மாதாந்திர ஸ்டேட்மெண்ட்டில் பின்வரும் பதிவுகள் இருக்கும்:

| தேதி | பரிவர்த்தனை வகை | தொகை | விளக்கம் |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | Rs 30,631.89 Dr | இருப்பு முந்தைய அறிக்கையிலிருந்து எடுத்து வரப்பட்டது |
| அக்டோபர் 10 | பேமெண்ட் | Rs 5,000 Cr | முந்தைய ஸ்டேட்மெண்ட் நிலுவைத் தொகைக்கான பேமெண்ட் |
| அக்டோபர் 11 | கொள்முதல்கள் | Rs 10,000 Dr | கிரெடிட் கார்டில் செய்யப்பட்ட கொள்முதல்கள் |
| அக்டோபர் 20 | வட்டி | Rs 1421.57 Dr | ரூ. 1421.57 க்கான கணக்கீட்டு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது |

வங்கியால் விதிக்கப்படும் கட்டணங்களும், கட்டண விதிப்புகளும் வட்டிக் கணக்கீட்டில் சேர்க்கப்படவில்லை. எனவே, பணப் பரிவர்த்தனை கட்டணம் மற்றும் இந்தக் கட்டணத்தின் மீதான GST மீது வட்டி விதிக்கப்படவில்லை.
அ) செப்டம்பர் 12 முதல் அக்டோபர் 9 வரை (28 நாட்கள்) ரூ. 25000 -க்கு 3.6% வட்டி [ரூ. 25,000 x 3.6% x 28 நாட்கள் x 12 மாதங்கள் / 365 நாட்கள் = ரூ. 828.49].
b) அக்டோபர் 10 முதல் அக்டோபர் 20 வரை (11 நாட்கள்) ரூ. 20000 -க்கு மாதத்திற்கு 3.6% வட்டி [ரூ. 20,000 x 3.6% x 11 நாட்கள் x 12 மாதங்கள் / 365 நாட்கள் = ரூ. 260.38]
c) செப்டம்பர் 15 முதல் அக்டோபர் 20 வரை (36 நாட்கள்) ரூ. 5000 -க்கு மாதத்திற்கு 3.6% வட்டி. [5000 x 3.6% x 36 நாட்கள்' x 12 மாதங்கள் / 365 நாட்கள் = ரூ. 213.04].
d) அக்டோபர் 11 முதல் அக்டோபர் 20 வரை (10 நாட்கள்) ரூ. 10,000 -க்கு மாதத்திற்கு 3.6% வட்டி [ரூ. 10,000 x 3.6% x 10 நாட்கள் x 12 மாதங்கள் / 365 நாட்கள் = 118.36].
e) செப்டம்பர் 20 முதல் அக்டோபர் 20 வரை (31 நாட்கள்) 35.50 (கடைசி ஸ்டேட்மெண்ட்டில் விதிக்கப்பட்ட வட்டி + வரி) -க்கு மாதத்திற்கு 3.6% வட்டி. [ரூ. 35.50 x 3.6% x 31 நாட்கள் x 12 மாதங்கள் / 365 நாட்கள் =ரூ.1.30].

| | | | |
|---|---|---|---|
| அக்டோபர் 20 | GST | Rs. 255.88 Dr | Rs. 1,421.57*18% = Rs. 255.88 |
| இறுதி இருப்பு | | Rs. 37,304.05 Dr | மொத்த நிலுவைத் தொகை |

# வட்டியைக் கணக்கிடும் முறையில் மாற்றம்

**01-04-2023** ஆம் தேதியிலிருந்து, வட்டித் தொகையைக் கணக்கிடும் விதத்தில் ஒரு மாற்றம் இருக்கும். வாடிக்கையாளர் சுழலும் வசதியைப் பயன்படுத்தும் போது (சுழலும் கிரெடிட்டைக் கொண்டிருக்கிறார் மற்றும் முந்தைய மாதத்தில் செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகையை விடக் குறைவாகச் செலுத்தியுள்ளார்) மேற்கொள்ளப்படும் அனைத்துப் பரிவர்த்தனைகளுக்கும் வட்டி விதிக்கப்படும்.

அதற்கான விளக்கப்படம் கீழே வழங்கப்பட்டுள்ளது:

- ஸ்டேட்மெண்ட் சுழற்சி - ஒவ்வொரு மாதமும் **16** ஆம் தேதி முதல் **15** ஆம் தேதி வரை
- ஸ்டேட்மெண்ட் உருவாக்கப்படும் தேதி - ஒவ்வொரு மாதமும் **16** ஆம் தேதி
- பேமெண்ட் தவணைத் தேதி - ஒவ்வொரு மாதமும் **4** ஆம் தேதி
- பேமெண்ட் தவணைத் தேதி (**3** சலுகை நாட்கள் உட்பட) - ஒவ்வொரு மாதமும் **7** ஆம் தேதி
- வட்டி விகிதம் - மாதத்திற்கு **3.6%**

சுழற்சி 1: மே 16 ஆம் தேதி முதல் ஜூன் 15 ஆம் தேதி வரை

மே 20 ஆம் தேதி கொள்முதல் செய்தது: 10,000 ரூபாய்

இந்த ஸ்டேட்மெண்ட் சுழற்சியில் வேறு கொள்முதல் எதுவும் இல்லை

10,000 ரூபாய்க்கான ஸ்டேட்மெண்ட், ஜூன் 16 ஆம் தேதி உருவாக்கப்பட்டது, பேமெண்ட் தவணைத் தேதி ஜூலை 4 ஆகும்

மொத்த நிலுவைத் தொகை (TAD): ரூ. 10,000

குறைந்தபட்ச நிலுவைத் தொகை (MAD): ரூ. 200

சுழற்சி 2: ஜூன் 16 ஆம் தேதி முதல் ஜூலை 15 ஆம் தேதி வரை

ஜூன் 20 ஆம் தேதி பேமெண்ட் செய்யப்பட்ட குறைந்தபட்ச நிலுவைத் தொகை: ரூ. 500

ஜூன் 25 ஆம் தேதியில் ரூ.3,000 -க்கு புதிய பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளது

ஜூலை 16 ஆம் தேதி (ஸ்டேட்மெண்ட் உருவாக்கப்படும் தேதி), பின்வரும் அம்சங்களைக் கொண்ட வட்டி விதிக்கப்பட்டது:

1. மே 20 முதல் ஜூன் 20 வரை ரூ. 10,000 நிலுவைக்கான வட்டி:
ரூ. 10,000*30 நாட்கள்*3.6%*12/365 = ரூ 355.07
2. ஜூன் 21 முதல் ஜூலை 15 வரை ரூ. 9,800 நிலுவைக்கான வட்டி:
ரூ. 9,800*25 நாட்கள்*3.6%*12/365 = ரூ. 289.97
3. ஜூன் 25 முதல் ஜூலை 15 வரை ரூ. 3,000 நிலுவைக்கான வட்டி:
ரூ. 3,000*21 நாட்கள்*3.6%*12/365 = ரூ. 74.56
4. மொத்த வட்டி மீதான 18% ஜிஎஸ்டி:
18% *(355.07+289.97+74.56) = ரூ 129.53

- மொத்த வட்டி (**355.07+289.97+74.56+129.53): ரூ 849.13**
- ஜூலை 16 அன்று இருப்பு: **12800 + 849.13 = ரூ 13,649.13.**

• 2 -வது சுழற்சியின் இறுதியில் ஸ்டேட்மெண்ட் உருவாக்கப்பட்டுள்ளது, மொத்த நிலுவைத் தொகை ரூ. 13649.13 ஆகும்
• குறைந்தபட்ச நிலுவைத் தொகை = கட்டணங்கள் + மீதமுள்ள நிலுவையில் 2%:
12,800 இல் 2% + 13,649.13 = INR 13905.13.
சுழற்சி 3: ஜூலை 16 ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 15 ஆம் தேதி வரை
ஜூலை 20 -இல் மொத்த நிலுவைத் தொகைக்கான பேமெண்ட்
ரூ. 13,905.13 பேமெண்ட் செய்தல். நிலுவையிலுள்ள இருப்பு பூஜ்ஜியம்
இந்த சுழற்சியின் போது வேறு கொள்முதல் எதுவும் இல்லை.
ஆகஸ்ட் 16 -இல் (ஸ்டேட்மெண்ட் உருவாக்கப்படும் தேதியில்), பரிவர்த்தனைகளுக்கும், பேமெண்ட்டிற்கும் இடையேயான தேதிகளில் உள்ள வித்தியாசத்திற்காகப் பின்வரும் வட்டி அம்சங்கள் சேர்க்கப்படும்.
1. ஜூலை 16 முதல் ஜூலை 20 வரை ரூ. 9,800 நிலுவைக்கான வட்டி:
ரூ 9,800 * 5 நாட்கள் * 3.6% * 12/365 = ரூ 56.21
2. மொத்த வட்டி மீது 18% ஜிஎஸ்டி:
18% * 57.99 = ரூ.10.43
• மொத்தக் கட்டணங்கள் = (57.99 + 10.43) = ரூ 68.42
• ஆகஸ்ட் 16 ஆம் தேதி ஸ்டேட்மெண்ட்டில் ரூ. 57.99 வட்டி மற்றும் ரூ. 10.43 GST சேர்க்கப்பட்டது.
• பேமெண்ட் தவணைத் தேதிக்குள் ரூ 68.42 செலுத்திய பிறகு, முந்தைய பரிவர்த்தனைகளுக்கு மேலும் வட்டி எதுவும் வசூலிக்கப்படாது

## குறைந்தபட்ச நிலுவைத் தொகையை (MAD) கணக்கிடும் முறையில் மாற்றங்கள்

நவம்பர் 10, 2023 முதல், ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டுகளுக்கு குறைந்தபட்ச நிலுவைத் தொகையை (MAD) கணக்கிடும் முறை மாற்றியமைக்கப்படும்.

தற்போதைய MAD கணக்கிடும் முறை:

MAD = (கொள்முதல்/பணம் எடுத்தல்) -இல் 5% + (வட்டி/நிதி கட்டணம், அனைத்து கட்டணங்கள், கடன்கள், வரிகள்) ஆகியவை 100%

மாற்றியமைக்கப்பட்ட MAD கணக்கிடும் முறை (நவம்பர் 10, 2023 முதல் அமலுக்கு வரும்):

MAD = (கொள்முதல்/பணம் எடுத்தல்) -இல் 2% + (வட்டி/நிதி கட்டணம், அனைத்து கட்டணங்கள், கடன்கள், வரிகள்) ஆகியவை 100%

குறைந்தபட்ச நிலுவைத் தொகையை (MAD) கணக்கிடுவதற்கான விளக்கப்படம்:

நீங்கள் முந்தைய நிலுவைத் தொகைகள் அனைத்தையும் முழுமையாகச் செலுத்திவிட்டீர்கள், உங்கள் கிரெடிட் கார்டு கணக்கில் எந்த நிலுவைத் தொகையும் இல்லை, உங்கள் ஸ்டேட்மெண்ட் ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதியில் உருவாக்கப்படும் என்று வைத்துக் கொள்ளலாம்.

**பழைய MAD கணக்கிடும் முறை:**

MAD = (கொள்முதல்/பணம் எடுத்தல்) -இல் 5% + (வட்டி/நிதி கட்டணம், அனைத்து கட்டணங்கள், கடன்கள், வரிகள்) ஆகியவை 100%

**மாற்றியமைக்கப்பட்ட MAD கணக்கிடும் முறை (நவம்பர் 10, 2023 முதல் அமலுக்கு வரும்):**

MAD = (கொள்முதல்/பணம் எடுத்தல்) -இல் 2% + (வட்டி/நிதி கட்டணம், அனைத்து கட்டணங்கள், கடன்கள், வரிகள்) ஆகியவை 100%

**குறைந்தபட்ச நிலுவைத் தொகையை (MAD) கணக்கிடுவதற்கான விளக்கப்படம்:**
நீங்கள் முந்தைய நிலுவைத் தொகைகள் அனைத்தையும் முழுமையாகச் செலுத்திவிட்டீர்கள், உங்கள் கிரெடிட் கார்டு கணக்கில் எந்த நிலுவைத் தொகையும் இல்லை, உங்கள் ஸ்டேட்மெண்ட் ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதியில் உருவாக்கப்படும் என்று வைத்துக் கொள்ளலாம்.

| | | | | பழைய MAD கணக்கிடும் முறை | | மாற்றியமைக்கப்பட்ட MAD கணக்கிடும் முறை | |
|---|---|---|---|---|---|---|---|
| **வரிசை எண்** | **பரிவர்த்தனைத் தேதி** | **வகை** | **Cr/ Db** | **MAD பங்களிப்பு** | **தொகை** | **MAD பங்களிப்பு** | **தொகை** |
| a | செப்டம்பர் 25 | கொள்முதல் | Db | 5% | 5000 | 2% | 5000 |
| b | அக்டோபர் 1 | சேர்வதற்கான கட்டணம் | Db | 100% | 1000 | 100% | 1000 |
| c | அக்டோபர் 1 | சேர்வதற்கான கட்டணம் மீதான GST | Db | 100% | 180 | 100% | 180 |
| d | அக்டோபர் 1 | பணம் எடுத்தல் | Db | 5% | 2000 | 2% | 2000 |
| e | அக்டோபர் 1 | பணம் எடுத்தல் கட்டணம் | Db | 100% | 100 | 100% | 100 |
| f | அக்டோபர் 1 | GST | Db | 100% | 18 | 100% | 18 |
| g | அக்டோபர் 15 | பணம் எடுப்பதற்கான வட்டி | Db | 100% | 35.5 | 100% | 35.5 |
| h | அக்டோபர் 15 | வட்டி மீதான GST | Db | 100% | 6.4 | 100% | 6.4 |
| **மொத்த நிலுவைத் தொகை** | | | | | **8339.89** | | **8339.89** |
| **குறைந்தபட்ச நிலுவைத் தொகை (MAD)** | | | | | **1689.90** | | **1479.90** |

பழைய முறையில், கீழ்க்கண்டவாறு குறைந்தபட்ச நிலுவைத் தொகை (MAD) கணக்கிடப்படும்:

MAD = கொள்முதல் மற்றும் பணம் எடுத்தலில் 5% + சேரும் கட்டணம், பணம் எடுத்தல் கட்டணம், பணம் எடுப்பதற்கான வட்டி, GST மற்றும் வட்டி மீதான GST ஆகியவை 100%

MAD = 5%*(5000+2000) + 100%*(1000+180+100+18+35.5+6.4) = 1689.90

குறைந்தபட்ச நிலுவைத் தொகையானது, ரூ. 1689.90 ஆக இருக்கும்

**நவம்பர் 10 ஆம் தேதி அமலுக்கு வருகின்ற, மாற்றியமைக்கப்பட்ட குறைந்தபட்ச நிலுவைத் தொகையானது (MAD), கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படும்:**
MAD = கொள்முதல் மற்றும் பணம் எடுத்தலில் 2% + சேரும் கட்டணம், பணம் எடுத்தல் கட்டணம், பணம் எடுப்பதற்கான வட்டி, GST மற்றும் வட்டி மீதான GST ஆகியவை 100%
MAD = 2%*(5000+2000) + 100%*(1000+180+100+18+35.5+6.4) = 1479.90
குறைந்தபட்ச நிலுவைத் தொகையானது, ரூ. 1479.90 ஆக இருக்கும்

நீங்கள் ₹5,000 செலவழித்து, ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச நிலுவைத் தொகையை (குறைந்தபட்ச பேமெண்ட் ₹100 என்பதற்கு உட்பட்டது) மட்டும் திருப்பிச் செலுத்தினால், மொத்தத் தொகையைத் திருப்பிச் செலுத்த உங்களுக்கு ~7 ஆண்டுகள் வரை ஆகும். எனவே, உங்களிடம் பணப்புழக்கம் அதிகமாக இருக்கும் போதெல்லாம், மொத்த நிலுவைத் தொகையையும் அல்லது உங்கள் குறைந்தபட்ச நிலுவைத் தொகையை விட கணிசமான அளவிற்கு அதிகமான தொகையையும் திருப்பிச் செலுத்துவதை நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

## விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் - EMI/கடனை முன்கூட்டியே முடித்தல்

நவம்பர் 10, 2023 ஆம் தேதியிலிருந்து, கடன் வசதி/கடன் காலகட்டத்தின்போது, கார்டுதாரர் கடன் வசதி/கடனை முன்கூட்டியே முடிக்கிறார் என்றால் கார்டுதாரர், கடைசி பில்லிங் தேதியில் இருந்து கடன் வசதி/கடனை முடிக்கும் தேதி வரையிலான மொத்த நிலுவைத் தொகையை (நிலுவையில் உள்ள அசல் தொகை, முன்கூட்டியே முடிப்பதற்கான கட்டணம், முடிக்கும் தேதி வரையிலான நாட்களுக்கு கடனுக்கான வட்டி உட்பட) வங்கிக்குச் செலுத்துவதற்குப் பொறுப்புடையவர் ஆவார். அத்தகைய சூழ்நிலையில், வட்டி விதிப்பிற்கான கார்டு ஸ்டேட்மெண்ட்டில் பின்வரும் பதிவுகள் இடம்பெறும்:
• A = மீதமுள்ள கடன் காலகட்டத்திற்கான வட்டி பற்று வைக்கப்படும் (அதாவது, கடன் காலகட்டம் முடிவடையும் தேதி வரையிலான கடைசி பில்லிங் தேதி)
• B = கடனை முன்கூட்டியே முடித்த பிறகான காலகட்டத்திற்கான (அதாவது, கடனை முன்கூட்டியே முடித்த தேதியில் இருந்து கடன் காலகட்டம் முடிவடையும் தேதி வரை) வட்டியானது, கார்டு கணக்கில் வரவு வைக்கப்படும்.
நிகர வட்டியானது, அதாவது, (A-B) கடைசி பில்லிங் தேதியிலிருந்து கடன் முன்கூட்டியே முடிக்கப்பட்ட தேதி வரையிலான நாட்களுக்கு வாடிக்கையாளருக்கு பில்லிங் செய்யப்படும்.
**விளக்கம்:** நீங்கள் முந்தைய நிலுவைத் தொகைகள் அனைத்தையும் முழுமையாகச் செலுத்திவிட்டீர்கள், உங்கள் கிரெடிட் கார்டு கணக்கில் எந்த நிலுவைத் தொகையும் இல்லை, உங்கள் மாதாந்திர ஸ்டேட்மெண்ட் ஒவ்வொரு மாதமும் 25 ஆம் தேதி உருவாக்கப்படும் என்று வைத்துக் கொள்ளலாம். 14% வட்டி விகிதத்துடன் மே 3, 2023 ஆம் தேதி 6 மாத காலத்திற்கு ரூ. 5,000 EMI (BoE) இல் பேலன்ஸ் எடுத்துள்ளீர்கள். ஜூலை, 2023 வரை 2 EMI-கள் கழிக்கப்படுகின்றன, ஜூலை 17, 2023 ஆம் தேதியில் முன்கூட்டியே கடனை முடிக்க விரும்புவதாக நீங்கள் கோரிக்கை வைத்துள்ளீர்கள்.

| தேதி | பரிவர்த்தனை வகை | தொகை (ரூ.) | விளக்கம் |
|---|---|---|---|
| மே 3, 2023 | பெறப்பட்ட BOE (EMI இல் இருப்பு) | Rs.5,000 | கிரெடிட் கார்டில் பெறப்பட்ட BOE (EMI இல் இருப்பு) |
| ஜூன் 2, 2023 | 1 -வது EMI தொகை | Rs.867.69 Dr | கழிக்கப்பட்ட EMI தொகை ரூ. 867.69 (அசல் = ரூ. 809.36, வட்டி = ரூ. 58.33) |
| ஜூலை 2, 2023 | வட்டி மீதான GST | Rs 10.50 Dr | வட்டி மீதான 18% GST 58.33*18% = ரூ. 10.50 |
| ஜூலை 2, 2023 | 2 -வது EMI தொகை | Rs.867.69 Dr | கழிக்கப்பட்ட EMI தொகை ரூ. 867.69 (அசல் = ரூ. 818.80, வட்டி = ரூ. 48.89) |
| ஜூலை 2, 2023 | வட்டி மீதான GST | Rs. 8.80 Dr | வட்டி மீதான 18% GST 48.89*18% = ரூ. 8.80 |
| ஜூலை 17, 2023 | BOE -ஐ முன்கூட்டியே முடித்தல்<br># 3 முதல் 6 வரையிலான EMI -களுக்கான வட்டிப் பற்று | Rs.159.08 Dr | ஜூலை 17, 2023 -இல் முன்கூட்டியே முடித்தல் கோரிக்கை. மீதமுள்ள காலகட்டத்திற்கான (ஜூலை 3, 2023 முதல் நவம்பர் 2, 20 23 வரை) வட்டிப் பற்று<br>3371.84*14%*123 நாட்கள்/365 நாட்கள்=159.08<br>(ரூ. 3371.84 அசல் நிலுவைத் தொகையாகும்) |
| ஜூலை 17, 2023 | மேல் வட்டி மீதான GST | Rs. 28.63 Dr | 159.08*18% = Rs. 28.63 |
| ஜூலை 17, 2023 | தவணை வட்டித் தள்ளுபடி | Rs.140.97 Cr | பயன்படுத்தாத காலகட்டத்திற்கான (ஜூலை 17, 2023 முதல் நவம்பர் 2, 2023 வரை)<br>வட்டியைத் தள்ளுபடி செய்தல்<br>3371.84*14%*109 நாட்கள்/365 நாட்கள்= ரூ. 140.97<br><br>(ரூ. 3371.84 அசல் நிலுவைத் தொகையாகும்) |
| ஜூலை 17, 2023 | GST தள்ளுபடி | Rs.25.37 Cr | 140.97*18%= Rs. 25.37 |
| | விதிக்கப்படும் நிகர வட்டி | Rs. 18.11 | கடைசி பில்லிங் தேதியிலிருந்து கடனை முடிக்கும் தேதி வரையிலான வட்டி |
| | விதிக்கப்படும் நிகர GST | Rs.3.26 | மேலேயுள்ள நிகர வட்டி மீதான GST |

மேலே குறிப்பிட்ட மாற்றங்கள், கிரெடிட் கார்டில் உடனடி கடன், நிலுவை இருப்பை EMI -க்கு மாற்றுதல், வணிகரிடம் பரிவர்த்தனையை EMI -க்கு மாற்றுதல்

(வணிக EMI) அல்லது அனைத்து ஆக்ஸிஸ் வங்கி கிரெடிட் கார்டுகளிலும் உள்ள போஸ்ட்- ஃபேக்ட்டோ (பரிவர்த்தனை EMI) அனைத்திற்கும் பொருந்தும். கடனை முன்கூட்டியே முடித்தல் தொடர்பான மற்ற கட்டணங்கள் அனைத்தும் ஏற்கனவே உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி நீடிக்கும்.
பின்வரும் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் பார்க்கவும்:

- கிரெடிட் கார்டில் கடன் - https://www.axisbank.com/retail/cards/credit-card/useful-links/card-services
- நிலுவை இருப்பை EMI -க்கு மாற்றுதல் - https://www.axisbank.com/retail/cards/credit-card/useful-links/card-services
- பரிவர்த்தனையை EMI -க்கு மாற்றுதல் - https://www.axisbank.com/retail/cards/credit-card/useful-links/card-services
- வணிகர் EMI (MEMI) - https://www.axisbank.com/retail/cards/credit-card/useful-links/card-services

## A) கடன் மற்றும் பணம் எடுத்தல் / அட்வான்ஸ் கட்டணம்

- **கடன் லிமிட்**: இது, கார்டுதாரருக்கு வழங்கப்படும் லிமிட் ஆகும். அனைத்துப் பரிவர்த்தனைகள், கட்டணங்கள் மற்றும் கட்டண விதிப்புகள் உட்பட, மொத்த நிலுவைத் தொகை இந்த லிமிட்டைத் தாண்டக் கூடாது.
- **பண லிமிட்**: இது கார்டுதாரருக்கு வழங்கப்படும் பண அட்வான்ஸ் லிமிட்டாகும். இந்த லிமிட்டானது கடன் லிமிட்டை விடக் குறைவாக இருக்கும், மேலும் இது ஒட்டுமொத்த கடன் லிமிட்டின் துணைக்குழுவாகும். ATM -களில் எடுக்கப்படும் பணத்திற்குப் பரிவர்த்தனைக் கட்டணம் விதிக்கப்படும். மேலும், ரீடைல் கொள்முதல்கள் போல் இல்லாமல் பணப் பரிவர்த்தனைகளுக்கு எப்போதும் பரிவர்த்தனைத் தேதியிலிருந்து வட்டி விதிக்கப்படும். இதில் பேமெண்ட் தவணைத் தேதிக்குள் 100% நிலுவை இருப்பை செலுத்துவதைப் பொறுத்து வட்டியைச் சேர்ப்பது இருக்கும்.

- **கிடைக்கும் கடன் லிமிட்**: எந்த நேரத்திலும் கிடைக்கும் கடன் லிமிட் என்பது, வழங்கப்பட்டுள்ள கடன் லிமிட்டிற்கும், அந்த நேரத்தில் கார்டில் நிலுவையில் உள்ள நிலுவைத் தொகைக்கும் இடையே உள்ள வித்தியாசமாக இருக்கும். முதன்மை கார்டுதாரருக்கு ஒதுக்கப்பட்ட இந்தக் கடன் லிமிட்டை ஆட்-ஆன் கார்டுதாரர்(கள்) பகிர்ந்து கொள்வார்கள்.

- **கிடைக்கும் பண லிமிட்**: எந்த நேரத்திலும் கிடைக்கும் பண லிமிட் என்பது, வழங்கப்பட்டுள்ள பண லிமிட்டிற்கும், அந்த நேரத்தில் கார்டில் நிலுவையில் உள்ள பண இருப்புக்கும் இடையேயுள்ள வித்தியாசமாக இருக்கும்.

- **சர்வதேச லிமிட்**: சர்வதேச லிமிட் என்பது, வெளிநாடுகளில் பயன்படுத்துவதற்காக வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் லிமிட் ஆகும். கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பிக்கும் போது சர்வதேச பயன்பாட்டைத் தேர்ந்தெடுத்த வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே இது பொருந்தும். இது உங்கள் வரவேற்புத் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேச லிமிட்டிற்கு ஏற்றவாறு இருக்கும்.

- கடன், பணம் மற்றும் சர்வதேச (ஏதேனும் இருந்தால்) லிமிட் ஆகியவை, ஒவ்வொரு கார்டுதாரருக்கும் வேறுபடும்.

  கார்டை டெலிவரி செய்யும் போது வரவேற்பு கடிதத்தில் இது பற்றி கார்டுதாரருக்குத் தெரிவிக்கப்படும், மேலும் கார்டுதாரருக்கு அனுப்பப்படும் மாதாந்திர ஸ்டேட்மெண்ட்டிலும் குறிப்பிடப்படும். ஒவ்வொரு மாதாந்திர ஸ்டேட்மெண்ட்டையும் உருவாக்கும் போது, அந்த ஸ்டேட்மெண்ட்டின் ஒரு பகுதியாக கிடைக்கும் கடன் லிமிட் விவரங்கள் வழங்கப்படுகின்றன.

- **பல கார்டுகள்-லிமிட்டைப் பகிர்தல்:** ஆக்ஸிஸ் வங்கி தனது தனிப்பட்ட சுய விருப்பத்தின் பேரில் கார்டுதாரரிடம் உள்ள கார்டு வகையிலிருந்து வேறுபட்ட கார்டு வகையை வழங்குவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. எந்தவொரு கிரெடிட் கார்டிலும், எந்த நேரத்திலும் வழங்கும் கடன் லிமிட்கள் மற்றும் பண லிமிட்கள் ஆக்ஸிஸ் வங்கியின் தனிப்பட்ட சுய விருப்பத்திற்கு உட்பட்டவையாகும். உங்களுடைய ஆக்ஸிஸ் வங்கி கிரெடிட் கார்டுகள் அனைத்திலும் இந்தக் கடன் லிமிட் பகிரப்பட்டுள்ளது. உங்கள் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டில் தனித்தனியாக உள்ள வெவ்வேறு கடன் லிமிட்கள் எவ்வாறு இருந்தாலும், ஒருங்கிணைந்த பயன்பாடு பகிரப்பட்ட லிமிட் அளவிற்குக் கட்டுப்படுத்தப்படும். தனிப்பட்ட கார்டில் கடன் லிமிட்கள் அல்லது வாடிக்கையாளர் மட்டத்தில் பகிரப்படும் லிமிட்கள் ஆகியவை வங்கியின் அடிப்படை உள் வழிகாட்டுதல்களின் படி, அதன் தனிப்பட்ட சுய விருப்பத்தின் பேரில் தீர்மானிக்கப்படும். நிலுவைத் தொகையானது கிரெடிட் கார்டு தரநிலைக்கு வழங்கப்பட்ட கடன் லிமிட்டைத் தாண்டும் சூழ்நிலையில், ஓவர்-லிமிட் கட்டணம் பொருந்தும்.
  வாடிக்கையாளரிடம் ஏற்கனவே ஏதேனும் கார்டுகள் இருந்தால், அவருடைய சமீபத்திய விண்ணப்பத்திற்கேற்ப. அவரது மக்கள்தொகை சார்ந்த மற்றும் தனிப்பட்ட விவரங்களைப் புதுப்பிக்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.
  ஒரு வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டுகளின் அதிகபட்ச எண்ணிக்கையானது, வங்கியின் உள்ளகக் கொள்கைகள் மற்றும் தனிப்பட்ட சுய விருப்பத்திற்கு உட்பட்டதாகும்.

- வாடிக்கையாளர் வைத்திருக்கும் கிரெடிட் கார்டுகள் அனைத்திலும் உள்ள கடன் லிமிட்கள், தற்போதைய உள்ளகக் கொள்கை வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டவையாகும், அவை வங்கியின் தனிப்பட்ட சுய விருப்பத்திற்கு உட்பட்டவையாகும். ஒரு வாடிக்கையாளரிடம் பல ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டுகள் உள்ளன என்றால், அந்தக் கார்டுகள் அனைத்திலும் லிமிட் பகிரப்படுவதுடன், அனைத்துக் கார்டுகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும். உதாரணம்: வாடிக்கையாளருக்கான கடன் லிமிட் ரூ. 1,00,000, வாடிக்கையாளரிடம் ஆக்ஸிஸ் வங்கியின் இரண்டு கிரெடிட் கார்டுகள் உள்ளன என்றால், ஒவ்வொரு கார்டின் தனிப்பட்ட லிமிட் ரூ. 1,00,000 ஆக இருக்கும், இது இரண்டு கார்டுகளிலும் பகிரப்படும். வாடிக்கையாளர் கார்டு

A இல் ரூ. 90,000 மதிப்பிலான பரிவர்த்தனைகளை மேற்கொண்டால், கார்டு B இல் எந்தச் செலவும் செய்யவில்லை என்றாலும் கூட, கார்டுகளில் பயன்படுத்தக்கூடிய கடன் லிமிட் ரூ. 10,000 ஆக இருக்கும். இந்தச் சூழ்நிலையில் வாடிக்கையாளரின் மொத்த லிமிட்டானது, கார்டு A இல் 1,00,000 ஆகவும், கார்டு B இல் 1,00,000 ஆகவும் இருக்காது.

- வாடிக்கையாளரிடம் ஆக்ஸிஸ் வங்கியின் ஒரு கார்டு இருந்து, வங்கியில் இருந்து மற்றொரு கார்டுக்கு அவர் விண்ணப்பிக்கும் பட்சத்தில், முதல் கார்டில் உள்ள அதே லிமிட் இரண்டாவது கார்டுக்கும் பொருந்தும். ஆனாலும், இரண்டாவது கார்டுக்கு விண்ணப்பிக்கும் போது, வாடிக்கையாளருக்கு அதிக லிமிட் வழங்கலாமா என மதிப்பாய்வு செய்யப்பட்டு, அதற்கான ஒப்புதலை இரண்டாவது கார்டுக்கான விண்ணப்பத்தின் மூலம் அளித்திருந்தால், மாற்றியமைக்கப்படும் லிமிட்டானது அனைத்துக் கார்டுகளுக்கும், அதாவது, ஏற்கனவே இருக்கும் கார்டுக்கும், புதிய கார்டுக்கும் பொருந்தும்,
- ஆக்ஸிஸ் வங்கி தனது தனிப்பட்ட சுய விருப்பத்தின் பேரில் வாடிக்கையாளர் வைத்திருக்கும் கார்டு(களில்) வழங்கப்பட்டுள்ள கடன் லிமிட்டை அவ்வப்போது மதிப்பாய்வு செய்யும் (அதிகரிப்பது அல்லது குறைப்பது உட்பட) உரிமையைக் கொண்டுள்ளது. அந்த மதிப்பாய்வின் அடிப்படையில், லிமிட்டை அதிகரிக்கும் சலுகை (குறிப்பிட்ட செல்லுபடியாகும் காலத்துடன்) வாடிக்கையாளருக்கு வழங்கப்படும், வாடிக்கையாளரின் வெளிப்படையான ஒப்புதலின் அடிப்படையில், அந்த வாடிக்கையாளர் வைத்திருக்கும் அனைத்து கிரெடிட் கார்டுகளிலும் அந்த அதிகரிப்பு செயல்படுத்தப்படும், இது செயலாக்கத்தின் போது மேற்கொள்ளப்படும் நிகழ்நேர சரிபார்ப்புகளுக்கு உட்பட்டதாகும். கடன் லிமிட்டை அதிகரிப்பது, க் கோரிக்கைக்கான நடவடிக்கை எடுக்கப்படும் தேதியில் அந்த கிரெடிட் கார்டு கணக்கு தகுதியுடையதாக இருப்பதற்கு உட்பட்டது. இது 3 வேலைநாட்களில் செயல்படுத்தப்படும்.
- வங்கியின் எந்தவொரு லிமிட்டை அதிகரிக்கும் சலுகைக்கும் வாடிக்கையாளர் தகுதி பெறவில்லை என்றால், தேவையான ஆவணங்களை வங்கியில் சமர்ப்பிப்பதன் அடைப்படையில் ஏற்கனவே உள்ள கடன் லிமிட்டை மதிப்பாய்வு செய்யுமாறு வாடிக்கையாளர்கள் கோரலாம். அத்தகைய மறுஆய்வும், அதிகரித்தலும் (ஏதேனும் இருந்தால்) வங்கியின் தனிப்பட்ட சுய விருப்பத்திற்கு உட்பட்டதாகும். அத்தகைய கோரிக்கைகள் 7 வேலை நாட்களுக்குள் செயல்படுத்தப்படும்.

- ## பயன்படுத்துவது பற்றிய RBI வழிகாட்டுதல்கள்

  RBI வழிகாட்டுதல்களின்படி, அனைத்துக் கார்டுகளும் இந்தியாவில் உள்ள தொடர்பு அடிப்படையிலான பயன்பாட்டு இடங்களில் மட்டுமே பயன்படுத்துவதற்காக மட்டுமே செயல்படுத்தப்படும் (ATM -கள் மற்றும் POS, அதாவது பாயிண்ட் ஆப் சேல்ஸ்சாதனங்கள்). ஆக்ஸிஸ் மொபைல் செயலி, இன்டர்நெட் பேங்கிங் அல்லது வாடிக்கையாளர் சேவையைத் தொடர்புகொள்வதன் மூலம் / அருகிலுள்ள கிளைக்குச் செல்வதன் மூலம் கான்டாக்ட்லெஸ், சர்வதேச, ஆன்லைன் பரிவர்த்தனைகளை இயக்குவதன் மூலம் அல்லது முடக்குவதன் மூலம் உங்கள் பயன்பாட்டு

விருப்பத்தேர்வை எப்போது வேண்டுமானாலும் நீங்கள் அமைக்கலாம் அல்லது மாற்றலாம் மற்றும் உங்கள் கார்டில் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கான லிமிட்களை நிர்வகிக்கலாம்.

உங்கள் கார்டின் முன்பக்கத்தில் உள்ள காண்டாக்ட்லெஸ் சின்னம், அந்தக் கார்டு கான்டாக்ட்லெஸ் பரிவர்த்தனையை ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளது என்பதைக் குறிக்கிறது. உங்கள் பிளாஸ்டிக் கார்டு மேலே குறிப்பிடப்பட்ட பரிவர்த்தனைகளில் எதையேனும் ஆதரிக்கவில்லை என்றால், உங்களால் விருப்பத்தேர்வுகள்/லிமிட்களை இயக்கவோ அல்லது முடக்கவோ முடியாது. உங்கள் கோரிக்கைக்கு வாடிக்கையாளர் சேவையை அழைக்கவும் அல்லது கிளைக்குச் செல்லவும்.

## C) கிரெடிட்-ஃப்ரீ காலகட்டம்

பரிவர்த்தனையின் தேதியைப் பொறுத்து வட்டி-இல்லாத சலுகைக் காலம் 20 முதல் 50 நாட்கள் வரை இருக்கலாம். முந்தைய மாத பில்லின் இருப்பு ஏதேனும் நிலுவையில் இருந்தால், வட்டி - இல்லாத கடன் காலகட்டம் தற்காலிக நிறுத்தம் செய்யப்படும்.

சலுகைக் காலகட்டத்தைக் கணக்கிடுவதற்கான விளக்க எடுத்துக்காட்டு: ஜூன் 20 ஆம் தேதியிலிருந்து ஜூலை 20 ஆம் தேதி வரையிலான காலகட்டத்தின் ஸ்டேட்மெண்ட்டிற்கு, ஆகஸ்ட் 10 ஆம் தேதி பேமெண்ட் தவணைத் தேதியாக இருக்கும். பேமெண்ட் தவணைத் தேதிக்குள் முந்தைய மாத ஸ்டேட்மெண்ட்டின் மொத்தத் தொகையையும் நீங்கள் செலுத்திவிட்டீர்கள் என்று கருதிக் கொண்டால், சலுகைக் காலகட்டம்:

1. ஜூன் 24 ஆம் தேதியிடப்பட்ட ஒரு கொள்முதலுக்கு, வட்டியில்லாத சலுகைக் காலகட்டம் ஜூன் 24 ஆம் தேதியில் இருந்து ஆகஸ்ட் 10 ஆம் தேதி வரை, அதாவது 47 நாட்கள் ஆகும்.
2. ஜூலை 14 ஆம் தேதியிடப்பட்ட ஒரு கொள்முதலுக்கு, வட்டி இல்லாத சலுகைக் காலகட்டம் ஜூலை 18 ஆம் தேதியிலிருந்து ஆகஸ்ட் 10 ஆம் தேதி வரை, அதாவது 23 நாட்கள் ஆகும். எனவே, கொள்முதல் தேதியைப் பொறுத்து சலுகைக் காலம் வேறுபடலாம். இருப்பினும், பேமெண்ட் தவணைத் தேதிக்குள் முந்தைய மாதத்திற்கான மொத்த நிலுவைத் தொகையை செலுத்தவில்லை என்றால், ஃப்ரீ கிரெடிட் காலகட்டத்தை இழக்க நேரிடுவதுடன், வட்டி - இல்லாத காலகட்டம் எதுவும் இருக்காது. பண அட்வான்ஸ்களைப் பொறுத்த வரையில், பரிவர்த்தனை தேதியிலிருந்து பேமெண்ட் தேதி வரை வட்டி விதிக்கப்படும்.

## D) பில்லிங் மற்றும் ஸ்டேட்மெண்ட்

i] **பில்லிங் ஸ்டேட்மென்ட்** - கால அளவு மற்றும் அனுப்பும் முறை: கார்டு கணக்கில் ஏதேனும் பரிவர்த்தனை அல்லது ரூ. 100 -க்கு மேல் ஏதேனும்

நிலுவைத் தொகை உள்ளதற்கு மாதம் ஒருமுறை ஒரு ஸ்டேட்மெண்ட் / இ- ஸ்டேட்மெண்ட்டை, வங்கிப் பதிவேடுகளில் உள்ள உங்கள் அஞ்சல் முகவரி / மின்னஞ்சல் முகவரிக்கு வங்கி அனுப்பி வைக்கும். ஸ்டேட்மெண்ட் கிடைக்கவில்லை என்பது, இந்த ஒப்பந்தத்தின் கீழ் உங்களுக்கு இருக்கும் கடமைகளையும், பொறுப்புகளையும் பாதிக்காது. பேமெண்ட் தவணைத் தேதிக்குள் கார்டில் நிலுவையில் உள்ள நிலுவையைத் தொகையை செலுத்த வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது.

ii] வணிக நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் பற்றுக்கள் அனைத்திற்கும், அதனால் ஏற்படும் கட்டணங்களுக்கும் கார்டு கணக்கில் வங்கி பற்று வைக்கும். கார்டுதாரர் வங்கியில் செலுத்தும் அனைத்துப் பேமெண்ட்களையும், கார்டுதாரரின் சார்பாக செலுத்தப்படும் பேமெண்ட்களையும் கார்டு கணக்கில் வங்கி வரவு வைக்கும்.

iii] ஸ்டேட்மெண்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறைந்தபட்ச நிலுவைத் தொகையை (MAD) மட்டுமே செலுத்துவதைக் கார்டுதாரர் தேர்வு செய்யக் கூடிய, சுழல் கடன் வசதியை கார்டுதாரருக்கு வங்கி வழங்கலாம். ஸ்டேட்மெண்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பேமெண்ட் தவணைத் தேதியில் அல்லது அதற்கு முன்பாக கார்டுதாரரின் மொத்த நிலுவைத் தொகையை (TAD) அல்லது MAD - ஐக் கார்டுதாரர் செலுத்த வேண்டும்.

iv] பேமெண்ட் தவணைத் தேதிக்குள் MAD -ஐச் செலுத்தவில்லை என்றால் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டை வங்கி திரும்பப் பெற்றுக் கொள்கின்ற அல்லது நிறுத்தி வைக்கின்ற (தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ) சிக்கலுக்கு நீங்கள் உள்ளாக நேரிடும். அந்தப் பேமெண்ட் செலுத்தாததற்கு ஒரு கட்டணமும் விதிக்கப்படும். கார்டு அசோசியேஷன் சிஸ்டத்தில் கார்டு எண்ணை ஹாட் லிஸ்ட் செய்வதன் மூலம், ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்று மற்றும்/அல்லது கார்டைக் கையகப்படுத்துமாறு வங்கி தனது தனிப்பட்ட சுய விருப்பத்தின் பேரில் வணிக நிறுவனத்திற்கு அறிவுறுத்தலாம்.

v] பில்லிங் காலகட்டத்தின் போது, பேமெண்ட் தவணைத் தேதிக்கு முன்பாக குறைந்தபட்ச நிலுவைத் தொகையை நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட முறை செலுத்தலாம் அல்லது தவணைத் தேதிக்கு முன் எந்த நேரத்திலும் கார்டு கணக்கில் எஞ்சிய நிலுவைத் தொகையைச் செலுத்தலாம்.

vi] உங்கள் கார்டு கணக்கில் செய்யப்படும் பேமெண்ட்கள் பின்வரும் வரிசையில் பங்கீடு செய்யப்படும்:

1. கட்டணங்கள் மற்றும் வரிகள் உள்ளிட்ட விதிப்புகள்
2. வட்டி விதிப்புகள்
3. பண அட்வான்ஸ்கள்
4. டயல்-எ-டிரா஀ப்ட்
5. EMI
6. இருப்புப் பரிமாற்றம்
7. கொள்முதல்கள்

vii] நீங்கள் வழங்கிய ஏதேனும் பேமெண்ட் அறிவுறுத்தல் பின்னர் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றால், கார்டு சலுகைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படலாம் / நிரந்தரமாக நிறுத்தப்படலாம், மேலும் கட்டண அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வங்கியின் தனிப்பட்ட சுய விருப்பத்தின் பேரில் அந்தக் கடன் கணக்கிற்கு ஒரு கட்டணம் விதிக்கப்படும். அந்தக் கட்டணத் தொகையானது வங்கியின் தனிப்பட்ட சுய விருப்பத்தின் அடிப்படையில் மாற்றத்திற்கு உட்பட்டது. ஏதேனும் தகுந்த சட்ட நடவடிக்கையைத் தொடங்கும் உரிமையையும் வங்கி கொண்டுள்ளது.

viii] வங்கியின் தனிப்பட்ட சுய விருப்பத்தின் பேரில் மாற்றப்படக் கூடிய, கட்டண அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைக் கட்டணத்திற்கு உட்பட்டு, உங்கள் கோரிக்கையைத் தொடர்ந்து மட்டுமே மாதாந்திரக் கணக்கு ஸ்டேட்மெண்ட்களின் நகல்களை வங்கி வழங்கும்.

ix] உங்கள் அஞ்சல் முகவரி / மின்னஞ்சல் முகவரியில் ஏதேனும் மாற்றம் செய்யும் பட்சத்தில், தொடர்ந்து உங்கள் ஸ்டேட்மெண்ட்களைச் சரியான நேரத்தில் பெறுவதற்காக, உடனடியாக வங்கியைத் தொடர்புகொண்டு, அதைப் புதுப்பிக்குமாறு அறிவுறுத்துகிறோம்.

x] பில்லிங் முரண்பாடுகள் - ஸ்டேட்மெண்ட் வழங்கப்பட்ட 60 நாட்களுக்குள், கார்டுதாரர்(கள்) ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால் அவற்றை வங்கியிடம் தெரிவிக்கும் வரை, ஸ்டேட்மெண்ட்டின் (ஸ்டேட்மெண்ட்களின்) அனைத்து உள்ளடக்கங்களும் சரியாகவும், கார்டுதாரர் ஏற்றுக்கொள்ளும் வகையில் இருப்பதாகவும் கருதப்படும். மேலே குறிப்பிட்ட முரண்பாடுகள் சட்டபூர்வமானவை என வங்கி கருதினால், வங்கியின் முழுமையான மற்றும் இறுதியான திருப்திக்காக வங்கியின் அடுத்தடுத்த விசாரணைகள் முடியும் வரை தற்காலிக அடிப்படையில் அந்தக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்யலாம். வங்கி மேற்கொள்ளும் மேலே குறிப்பிடப்பட்ட விசாரணைகளில், அந்த (முரண்பாடுகள்) பொறுப்பானது குறிப்பிடப்பட்டகார்டுதாரரிடம் (கார்டுதாரர்களிடம்) வசூலிக்கப்பட வேண்டியது என்பது தெரிய வந்தால், அடுத்த ஸ்டேட்மெண்ட்டில் அந்தக் கட்டணம் மீண்டும் சேர்க்கப்படும், கட்டண அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களுக்கேற்ப அந்தக் கட்டணங்கள் / விதிப்புகளை வங்கி வசூலிக்கும்.

xi] EMI வசதியைப் பெறும்போது, அசல் பரிவர்த்தனையில் ஏதேனும் ரிவார்டு பாயிண்ட்கள் சேர்ந்திருந்தால், அவை நீக்கப்படும்.

## E) UPI -இல் ஆக்ஸிஸ் பேங்க் ரூபே கிரெடிட் கார்டு

இந்த விதிமுறைகளும் நிபந்தனைகளும் பயனர் மற்றும் ஆக்ஸிஸ் வங்கிக்கு இடையே ஒப்பந்தத்தை உருவாக்குகிறது, இவை மேலே பட்டியலிடப்பட்டுள்ள கிரெடிட் கார்டு MITC -உடன் சேர்ந்து கூடுதலாக இருக்கும்.

தகுதி பெறுவதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பயனர்களுக்கு மட்டுமே இந்த வசதி கிடைக்கும், இது ஆக்ஸிஸ் வங்கியின் தனிப்பட்ட சுய விருப்பத்தின் பேரிலேயே வழங்கப்படும், மேலும் பயனர்களுக்கு

முன் அறிவிப்போடு அல்லது இல்லாமல் எந்த நேரத்திலும் இதை ஆக்ஸிஸ் வங்கி நிறுத்தலாம்.

## சேவைக்கான விதிமுறைகள்

UPI -இல் கிரெடிட் கார்டுக்கான இந்த விதிமுறைகளும், நிபந்தனைகளும் ஆக்ஸிஸ் வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய எந்தவொரு கணக்கு அல்லது பிற வசதிகளின் பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் சேர்ந்து கூடுதலாக இருக்கும்.

1. இந்த வசதியானது, பயனரின் கோரிக்கையின் அடிப்படையில், ஆக்ஸிஸ் வங்கி ரூபே கிரெடிட் கார்டின் ஒப்புதலுக்கு உட்பட்டு வழங்கப்படும்
2. UPI செயலியுடன் இணைப்பதற்கு, வாடிக்கையாளர் தனது ஆக்ஸிஸ் பேங்க் ரூபே கிரெடிட் கார்டுடன் இணைக்கப்பட்டுள்ள, பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணைப் பயன்படுத்த வேண்டும்
3. ஆக்ஸிஸ் பேங்க் ரூபே கிரெடிட் கார்டைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கும், UPI செயலி மூலம் கட்டணப் பரிவர்த்தனைகளை அங்கீகரிப்பதற்கும் பயனர் 6 இலக்க UPI பின்னை அமைக்க வேண்டும். UPI பரிவர்த்தனைகளை அங்கீகரிப்பதற்கு 4 இலக்க கிரெடிட் கார்டு பின் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாது
4. UPI பின்னை அமைப்பது என்பது, அனைத்து வகையான பரிவர்த்தனைகளுக்கும் கிரெடிட் கார்டைச் செயல்படுத்துவதற்கு வாடிக்கையாளர் ஒப்புதல் அளிப்பதாகக் கருதப்படும்
5. ரூபே நெட்வொர்க்கில் அனுமதிக்கப்படும் P2M பரிவர்த்தனைகளை மட்டுமே பயனர் மேற்கொள்ளலாம்
6. உங்கள் UPI செயலியில் சர்வதேசப் பரிவர்த்தனைகளை செயல்படுத்தியிருந்தால், UPI இல் CC பரிவர்த்தனைகளும் அனுமதிக்கப்படும்
7. P2P, P2PM, டிஜிட்டல் கணக்குத் திறத்தல், கடன் வழங்கும் பிளாட்ஃபார்ம், வணிகரிடம் பணம் எடுத்தல், ATM -இல் பணம் எடுத்தல், ERUPI, IPO, வெளிநாட்டு இன்வர்டு ரெமிட்டன்ஸ்கள், மியூச்சுவல் ஃபண்டுகள் மற்றும் ஆக்ஸிஸ் வங்கி/RBI ஆல் தடை செய்யப்பட்டுள்ள மற்ற எந்த முறைகளிலும் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு அனுமதி இல்லை
8. வாடிக்கையாளருக்கு ஆக்ஸிஸ் வங்கி வழங்கும் கிரெடிட் கார்டு லிமிட்களுக்கு மேல், தற்போதைய UPI பரிவர்த்தனை லிமிட்களும் பொருந்தும்
9. கிரெடிட் கார்டு பரிவர்த்தனைகளுக்குப் பொருந்தக்கூடிய எந்தவொரு கட்டணமும், நிதிக் கட்டணங்களும், கூடுதல் கட்டணங்களும் அல்லது மார்க்-அப்களும் UPI –இல் CC பரிவர்த்தனைகளுக்கும் பொருந்தும்
10. UPI -இல் CC பரிவர்த்தனைகளிருந்து பணம் எடுக்க அனுமதி இல்லை
11. UPI இல் CC க்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்தவொரு பரிவர்த்தனையும் உங்கள் தற்போதைய கிரெடிட் கார்டு லிமிட்டில் இருந்து கழிக்கப்படும்.

12. ஆக்ஸிஸ் வங்கியைத் தொடர்பு கொள்வதன் மூலம் அல்லது பரிவர்த்தனையை முடித்த UPI செயலி மூலம் சார்ஜ் பேக் அல்லது ரீ◌ஃபண்டு கோரிக்கையை எழுப்பலாம்.

13. எரிபொருள் ஸர்சார்ஜ் விதிக்கப்படும் பட்சத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆக்ஸிஸ் பேங்க் ரூபே கிரெடிட் கார்டின் தற்போதைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப, அது தள்ளுபடி செய்யப்படும்

14. இந்த வசதியானது, நிதியைப் பெறுவதற்கான இயல்புநிலை விருப்பமாக ஆக்ஸிஸ் பேங்க் ரூபே கிரெடிட் கார்டை ஏற்றுக் கொள்ளாது

15. ஆக்ஸிஸ் பேங்க் ரூபே கிரெடிட் கார்டைப் புதுப்பிக்கும் பட்சத்தில், புதுப்பிக்கப்பட்ட கிரெடிட் கார்டு விவரங்களை UPI பயன்பாட்டில் பயனர் மீண்டும் பதிவு செய்ய வேண்டும்

16. சாதனத்தை மாற்றும் போது, அதே சிம்மைக் கொண்டு பயனர் UPI செயலியில் கிரெடிட் கார்டுக்கு மீண்டும் பதிவு செய்ய வேண்டும். முந்தைய சாதனத்தில் நிறுவியிருந்த செயலி பதிவு-நீக்கம் செய்யப்படும்.

17. MCC 6513 அடையாளப்படுத்தியுள்ள ஒவ்வொரு வாடகைப் பேமெண்ட்டிற்கும், UPI இல் CC பரிவர்த்தனைத் தொகையில் 1%, அதிகபட்சமாக ரூ.1500 வரை வாடகை ஸர்சார்ஜ் விதிக்கப்படும்.

## F) கிரெடிட் கார்டைப் பயன்படுத்துதல்

- தனிப்பட்ட செலவுகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மட்டுமே கிரெடிட் கார்டு வழங்கப்படுகிறது. ஏதேனும் நிதிசார் ஆதாயத்தைப் பெறுவதற்காக, வணிக அல்லது வியாபார நோக்கங்களுக்காக, மறுவிற்பனைக்காக எதையேனும் வாங்குவதற்கு இந்தக் கிரெடிட் கார்டைக் கார்டுதாரர் பயன்படுத்தக் கூடாது. இந்தக் கிரெடிட் கார்டை சட்டப்பூர்வமான, நேர்மையான தனிப்பட்ட நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். பணமோசடி, சமூக விரோத அல்லது ஊக நடவடிக்கைகளுக்கோ அல்லது வியாபாரத்தில் வணிக ரீதியாகவோ (எ.கா. செயல்பாட்டு மூலதன நோக்கங்களுக்காக) பயன்படுத்தக் கூடாது.
- சேருதல் / வருடாந்திரக் கட்டணம், அந்நியச் செலாவணி மார்க்அப், GST/VAT, DCC, எரிபொருள் ஸர்சார்ஜ், தாமத பேமெண்ட் கட்டணம், பற்று வட்டி, வாடகை சரசார்ஜ், காசோலை பவுன்ஸ் கட்டணம் தவிர்த்து, அனைத்துச் செலவினங்களும் மைல்ஸ்டோன் செலவினங்களுக்காகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.
- கார்டு உறுப்பினர்கள் தங்கள் கிரெடிட் கார்டில் அதிகப்படியான பேமெண்ட் செய்வதற்கோ, அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்காகத் தங்கள் அனுமதிக்கப்பட்ட கடன் லிமிட்டைச் செயற்கையாக அதிகரிப்பதற்கோ அனுமதிக்கப்படாது. அது போன்ற தேவை ஏற்பட்டால், கடன் லிமிட்டை அதிகரிப்பதற்கு வங்கியை அணுகுமாறு கார்டு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்துகிறோம்.
- RBI உத்தரவின்படி தடைசெய்யப்பட்ட MCC குறியீடுகளில் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படுவது கவனிக்கப்பட்டால், அந்தக் கிரெடிட் கார்டைத் தடுத்து வைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

• வங்கியின் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பொருந்தக்கூடிய கொள்கைகளுக்கேற்ப கிரெடிட் கார்டைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக, ஒரு ஸ்டேட்மெண்ட் சுழற்சியில் அனுமதிக்கப்பட்ட லிமிட்டைத் தாண்டி கடன் லிமிட் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா, வழக்கத்திற்கு மாறாக அல்லது சில குறிப்பிட்ட வணிகர்களிடம் மட்டும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா, வேறு கிரெடிட் கார்டு/கடன்களுக்குப் பணம் செலுத்த, சேமிப்புக் கணக்கிற்கு நிதி பரிமாற்றம் செய்யப் பயன்படுத்தப்பட்டுள்ளதா, வணிகருடன் சாத்தியமான கூட்டு மற்றும்/அல்லது தனிப்பட்ட/வணிகம் தொடர்பான தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதா, கெடு நெருங்காத ரிவார்டு பாயிண்ட்கள்/கேஷ்பேக் /மற்ற பலன்கள் போன்றவற்றைக் குவிப்பதற்காக அம்சங்கள்/சலுகைகள்/திட்டங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனவா ஆகிய்வற்றைக் கண்டறிவதற்காக இந்தக் கிரெடிட் கார்டின் பயன்பாட்டை அவ்வப்போது சரிபார்க்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது. அது போன்ற சூழ்நிலையில், ஆக்ஸிஸ் வங்கி தனது தனிப்பட்ட சுய விருப்பத்தின் அடிப்படையில், கார்டுதாரருக்கு எந்த அறிவிப்பும் செய்யாமல் சம்பந்தப்பட்ட கிரெடிட் கார்டு மற்றும் அதன் கூடுதல்/ஆட்-ஆன் கார்டுகளை ரத்து செய்வதற்கும், வாடிக்கையாளர் மட்டத்தில் பெற்ற கேஷ்பேக்/ரிவார்டு பாயிண்ட்களை நிறுத்தி வைப்பதற்கும் / ரத்து செய்வதற்கும் தனது உரிமையைப் பயன்படுத்தலாம். உங்களிடம் தொலைபேசி மூலமோ அல்லது வேறு ஏதேனும் தகுந்த தொடர்பு கொள்ளும் முறையிலோ விசாரித்து, கிரெடிட் கார்டு பரிவர்த்தனைகள், பயன்படுத்தும் முறை போன்றவற்றைப் பற்றிய விவரங்கள், தகவல்கள், சான்றுகள் போன்றவற்றை ஆக்ஸிஸ் வங்கி பெறலாம். கார்டுதாரர் அளிக்கும் பதில்கள் திருப்தியளிக்கவில்லை என்றாலோ, கார்டுதாரர் பதிலளிக்கவில்லை என்றாலோ ஆக்ஸிஸ் வங்கி அந்தக் கிரெடிட் கார்டை தடுத்து வைக்கலாம்/ முடித்து விடலாம்.

• முதன்மை கார்டுதாரர் அல்லது வங்கியால், எந்த நேரத்திலும், எந்தக் காரணத்திற்காகவும் கார்டுதாரரின் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் நிறுத்தப்பட்டால், உடனடியாக அந்த முதன்மைக் கார்டுதாரர் ரிவார்டுகள்/கேஷ்பேக் பெறுவதில் இருந்து தகுதிநீக்கம் செய்யப்படுவார். சுய விருப்பத்துடன் அல்லது விருப்பமின்றி ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு ரத்து செய்யப்பட்ட உடனே அப்போது சேர்ந்துள்ள, பயன்படுத்தாத ரிவார்டு/கேஷ்பேக் அனைத்தும் ரத்து செய்யப்படும்.

• விதிமுறைகளையும், நிபந்தனைகளையும் மீறியதற்காக ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டை வங்கி நிறுத்துகின்ற சூழ்நிலைகளில், கார்டுதாரருக்கு NOC வழங்க முடியாது.

• சம்பந்தப்பட்ட தேதியில், கார்டு திரும்பப் பெறப்பட்டிருந்தாலோ அல்லது ரத்து செய்யப்பட்டிருந்தாலோ அல்லது ரத்து செய்யப்பட வேண்டியதாக இருந்தாலோ அல்லது கார்டு உறுப்பினரின் கணக்கு பொறுப்புத் தவறிய கணக்காக இருந்தாலோ, மாற்றுவதன் மூலம் ரிவார்டு பாயிண்ட்களைப் பெறுவதற்கோ, ரெடீம் செய்வதற்கோ அனுமதிக்கப்படாது

• எந்த நேரத்திலும், முன் அறிவிப்பு இல்லாமல், அல்லது எந்தக் காரணமும் கூறாமல், வங்கி ஒரு வணிக நிறுவனத்தில் கட்டணம் வசூலிப்பதற்கான அங்கீகாரத்தை மறுக்கலாம், மேலும் / அல்லது அந்தக் கார்டைப் பயன்படுத்துவதற்குக் கார்டுதாரரைத் தடை செய்யலாம் அல்லது ஒத்திவைக்கலாம் மற்றும் / அல்லது அந்தக் கார்டைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம். கடன் அல்லது வணிக அபாயத்தை சரியான முறையில் நிர்வகிப்பதற்கு அவசியம் அல்லது அந்தக் கார்டு அல்லது கார்டு கணக்கு தவறாகப் பயன்படுத்தப்படுகிறது அல்லது தவறாகப் பயன்படுத்த வாய்ப்புள்ளது என வங்கி நியாயமாக நம்பும் பட்சத்தில், ATM, வணிக நிறுவனம் மூலம் வங்கியே கிரெடிட் கார்டைத் திரும்பப் பெறலாம் / பிடித்து வைக்கலாம்.

• எந்த விதத்திலும் உங்களுக்குப் பொறுப்பேற்காமல், வங்கி தனது சொந்த விருப்பத்தின் பேரில் கார்டைத் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் / திரும்பப் பெறலாம். கார்டு மற்றும் இந்தக் கார்டு உறுப்பினர் ஒப்பந்தம் முடிவடையும் போது தானாகவே இதனுடன் இணைக்கப்பட்டுள்ள சலுகைகள், பலன்கள் மற்றும் வசதிகளும் முடிவுக்கு வரும்.

## ஜி) கிளியரிங் டேர்ன் அரவுண்டு நேரம் (TAT) மூலம் பேமெண்ட் செய்யும் முறை

பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் கார்டு கணக்கிற்குப் பேமெண்ட் செய்யலாம்:

1. **பணம்***: கார்டு பேமெண்ட்செய்வதற்கு ஆக்ஸிஸ் வங்கியின் எந்தக் கிளையிலும் கார்டுதாரர் பணத்தை டெபாசிட் செய்யலாம். கிளைகளில் செய்யப்படும் இந்தப் பேமெண்ட்களுக்கு, பேமெண்ட் பரிவர்த்தனை ஒன்றுக்கு ரூ. 100 கட்டணம் விதிக்கப்படும்.
பண பேமெண்ட்டிற்கான கிளியரன்ஸுக்கான TAT – அதே நாள்.

2. **காசோலை / டிரா·ஃப்ட்***: "ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு எண். XXXXXXXXXXXX" -க்கு ஒரு காசோலையை எழுதி அல்லது டிரா·ஃப்ட் எடுத்து, அதை ஆக்ஸிஸ் வங்கிக் கிளைகளில் உள்ள MINC / SKYFIN பெட்டிகளில்/கவுண்ட்டரில் உள்ள சேகரிப்பு பெட்டியில் போடவும். வெளியூர் காசோலைகள் / டிரா·ஃப்ட்கள், அதாவது குறிப்பிட்ட நகரங்களைத் தவிர (வங்கி அவ்வப்போது தீர்மானிக்கும் அத்தகைய குறிப்பிட்ட நகரங்களின் பட்டியல், கோரிக்கையின் பேரில் கிடைக்கும்) மற்ற நகரங்களில் செலுத்தப்படக் கூடிய காசோலைகள் / டிரா·ஃப்ட்களுக்கு செயலாக்கக் கட்டணம் விதிக்கப்படலாம். ஆக்ஸிஸ் வங்கியின் காசோலையின் கிளியரன்ஸுக்கான TAT - 1 வேலை நாள். வேறு வங்கிக் காசோலையின் கிளியரன்ஸுக்கான TAT – ரியலைஸ் செய்யப்படுவதன் அடிப்படையில் 3 - 5 வேலை நாட்கள் (வெளியூர் காசோலை கிளியரன்ஸுக்கு கூடுதல் நாள் தேவை. கிளையில் விசாரிக்கவும்).

*கிரெடிட் கார்டின் பேமெண்ட் தவணைத் தேதி 2வது மற்றும் 4வது சனிகிழமையில் அல்லது ஞாயிற்றுக்கிழமையில் வரும் பட்சத்தில், காசோலை/பண பேமெண்ட்டை அங்கீகரிக்காமல் கிளைகள் மூடப்பட்டிருக்கும்.

3. **இணைக்கப்பட்டுள்ள ஆக்ஸிஸ் வங்கி சேமிப்புக் கணக்கின் மூலம் இன்டெர்நெட் பேமெண்ட் செய்தல்:** ஆக்ஸிஸ் வங்கி இணையதளத்தின் வாயிலாக கார்டுதாரர் ஆன்லைனில் பேமெண்ட் செய்யலாம். www.axisbank.com -இல் உள்நுழையவும். கிளியரன்ஸுக்கான TAT - 1 வேலை நாள்.

4. **ஆட்டோ-டெபிட்:** ஒவ்வொரு மாதமும் பேமெண்ட் தவணைத் தேதியில் சேமிப்புக் கணக்கில் இருந்து பேமெண்ட்டைப் பற்று வைக்குமாறு எழுத்துப்பூர்வ அறிவுறுத்தலை வழங்குவதன் மூலம், அந்த சேமிப்புக் கணக்கிலிருந்து நேரடியாக கார்டுதாரர்கள் பணம் செலுத்தலாம். பேமெண்ட் தவணைத் தேதி ஞாயிற்றுக்கிழமையாக இருக்கும் பட்சத்தில், அடுத்த வேலை நாளில் அந்தக் கணக்கில் இருந்து தொகை கழிக்கப்படும். கிளியரன்ஸுக்கான TAT - 1 வேலை நாள்.

5. **கிளிக் டு பே / NEFT / VMT:** கிளிக் டு பே / NEFT / VMT -ஐப் பயன்படுத்தி, உங்கள் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு நிலுவைத் தொகையை உங்களுடைய வேறு ஒரு வங்கி சேமிப்புக் கணக்கில் இருந்து செலுத்துங்கள்.
கிளிக் டு பே கிளியரன்ஸுக்கான TAT - 3 வேலை நாட்கள்.
NEFT கிளியரன்ஸுக்கான TAT - 1 வேலை நாள்.
VMT கிளியரன்ஸுக்கான TAT - 2 வேலை நாட்கள்.

6. **ATM -கள் மூலம் பேமெண்ட் செய்தல்:** உங்கள் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு தவணைகளை எந்தவொரு ஆக்ஸிஸ் வங்கி ATM –இலும், உங்கள் ஆக்ஸிஸ் பேங்க் டெபிட் கார்டு மூலம் செலுத்துங்கள். கிளியரன்ஸுக்கான TAT - 1 வேலை நாள்.

7. **IMPS கிரெடிட் கார்டு பேமெண்ட்:** IMPS மூலம், நிகழ் நேரத்தில் கார்டுதாரர்கள் வேறு எந்தவொரு வங்கியின் மொபைல் செயலியில் இருந்தும் எந்தவொரு ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டிற்கும் பணம் செலுத்தலாம். பல ஆக்ஸிஸ்

கிரெடிட் கார்டு கணக்குகளை பேமெண்ட் செய்வதற்காக உங்கள் மொபைல் செயலியில் பதிவு செய்து கொள்ளலாம். இந்த வசதியின் மூலம் யாரும் (சக பணியாளர்கள் / நண்பர்கள் / வாழ்க்கைத்துணை) யாருடைய கிரெடிட் கார்டுக்கும் பணம் செலுத்தலாம்.

கிளியரன்ஸுக்கான TAT -அதே நாள்.

8. **3-ஆம் தரப்புச் சேனல்கள் மூலம் பேமெண்ட் செய்தல்:** மேலே குறிப்பிடப்பட்டுள்ள முறைகள் மூலம் கார்டுதாரர்கள் தங்கள் கிரெடிட் கார்டு

நிலுவைத் தொகையை செலுத்துமாறு ஆக்ஸிஸ் வங்கி அவர்களுக்குப் பரிந்துரைக்கிறது. ஆக்ஸிஸ் வங்கியுடன் இணைக்கப்படாத மூன்றாம் தரப்புச் செயலிகள் உள்ளிட்ட, பிற சேனல்கள் மூலம் மேற்கொள்ளப்படும் எந்த கிரெடிட் கார்டு பேமெண்ட்டிற்கான கிளியரன்ஸுக்கும் அதிக TAT இருக்கலாம். தவனைத் தேதிக்குள் ஆக்ஸிஸ் வங்கிக்குப் பணம் செலுத்தப்படவில்லை என்றால், அந்தக் கார்டு வகைக்குப் பொருந்துகின்ற அபராதக் கட்டணங்கள் பொருந்தும். இணைக்கப்படாத சேனல்கள் மூலம் கார்டில் பேமெண்ட் செய்வதில் தாமதம்/பிரதிபலிப்பு இல்லாமை பற்றி எழும் கேள்விகளுக்கு, வாடிக்கையாளர் நேரடியாகச் சம்பந்தப்பட்ட சேனல்களை அணுகலாம்.

9. **வெளிநாடு வாழ் இந்தியக் கிரெடிட் கார்டுதாரர்களுக்கான பேமெண்ட்**: வங்கி தனது வெளிநாடு வாழ் இந்தியக் கிரெடிட் கார்டுதாரர்களுக்கு சர்வதேச கிரெடிட் கார்டின் வசதியை வழங்குகிறது, அந்தக் கிரெடிட் கார்டுகளுக்கு ஆக்ஸிஸ் வங்கி NRE கணக்கைப் பயன்படுத்தி பேமெண்ட் செய்வதைக் கட்டாயமாக்குகிறது. அந்த ஆக்ஸிஸ் வங்கி NRE கணக்கிலிருந்து ஆட்டோ-டெபிட் செய்ய வேண்டியது, அந்த வெளிநாடு வாழ் இந்திய கிரெடிட் கார்டுதாரர்களுக்குக் கட்டாயமாகும். ஆக்ஸிஸ் வங்கி NRO கணக்கிலிருந்து பேமெண்ட் செய்யப்படும் பட்சத்தில், NRO கணக்கிலிருந்து பேமெண்ட் செய்ய விரும்பும் ஒவ்வொரு முறையும், படிவம் 15 CA/CB மற்றும் அந்த NRO வங்கிக் கணக்கின் காசோலை உள்ளிட்ட, குறிப்பிட்ட சில ஆவணங்கள் தேவையாகும். தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்காமல் NRE இல்லாத வேறு முறையில் பேமெண்ட் செய்யப்பட்டு, அது NRE இல்லாத முறை என்பதை வங்கியால் நிறுவ முடிந்தால் அல்லது அது NRE இல்லாத முறை என நம்புவதற்குக் காரணம் இருந்தால், அந்த ஆவணங்கள் வங்கிக்கு கிடைக்கும் வரை அந்தக் கார்டின் சர்வதேச பயன்பாட்டை செயலிழக்கச் செய்யும் உரிமை வங்கிக்கு உள்ளது. குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த ஆவணங்களை வழங்கவில்லை என்றால், 'முதன்மை வழிகாட்டுதல்-ஃபெமா, 1999 -இன் கீழ் மீறல்களின் தொகுப்பு', (FED முதன்மை வழிகாட்டுதல் எண்.4/2015-16 ஜனவரி 01, 2016 தேதியிடப்பட்டது, ஜனவரி 04, 2021 - இல்புதுப்பிக்கப்பட்டது) உள்ளடக்கிய தொகுப்பைத் தாக்கல் செய்யுமாறு வங்கி வாடிக்கையாளரை வலியுறுத்தலாம்). தொகுப்பு பற்றி மேலும் அறிந்து கொள்ள, கீழே உள்ள இணைப்பைப் பார்வையிடலாம். https://m.rbi.org.in/SCRIPTs/FAQView.aspx?Id=80.

## H. கார்டு உறுப்பினர் பதிவை நீக்குதல் / ஒப்படைத்தல் / ரத்து செய்தல்

கார்டுதாரர், எந்த நேரத்திலும், ஏதேனும் முன் அறிவிப்புடன் அல்லது இல்லாமல் கார்டு கணக்கை நீக்குவதை / ஒப்படைப்பதைத் தேர்வு செய்யலாம். தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காக, ஹாலோகிராமும், காந்தப் பட்டையும் நிரந்தரமாக அழிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக கிரெடிட் கார்டை நான்கு துண்டுகளாக வெட்டுமாறு அறிவுறுத்தப்படுகிறது. கார்டு எண்ணை முழுமையாகக் குறிப்பிட்டு வாடிக்கையாளர் சேவை மின்னஞ்சல் முகவரிக்குக்

கடிதம் எழுதுவதன் மூலம் அல்லது வாடிக்கையாளர் சேவையை அழைப்பதன் மூலம், கார்டுதாரர் எந்த நேரத்திலும் கார்டு உறுப்பினர் பதிவை நீக்கலாம். கார்டு கணக்கு தொடர்பாக செலுத்த வேண்டிய மற்றும் நிலுவையில் உள்ள அனைத்துத் தொகைகளையும் ஆக்ஸிஸ் வங்கிக்குச் செலுத்திய பிறகு மட்டுமே இந்த நீக்கம் நடைமுறைக்கு வரும். ஒரு கிரெடிட் கார்டு திட்டம் முடிக்கப்படும் போது அல்லது கிரெடிட் கார்டை புதுப்பிக்கும் பட்சத்தில், ஆக்ஸிஸ் வங்கி தனது தனிப்பட்ட சுய விருப்பத்தின் பேரில் கார்டுதாரர் வைத்திருக்கும் கார்டு வகையிலிருந்து மாறுபட்ட வேறு வகையான கார்டை வழங்குவதற்கான உரிமையை கொண்டுள்ளது. எந்தக் கிரெடிட் கார்டிலும் எந்த நேரத்திலும் வழங்கப்படும் கடன் லிமிட்கள் மற்றும் பண லிமிட்கள் ஆக்ஸிஸ் வங்கியின் தனிப்பட்ட சுய விருப்பத்தின் பேரிலேயே இருக்கும். முடிக்கப்படும் / புதுப்பிக்கப்படும் போது மாற்றாக வழங்கப்படும் கார்டுக்கு விண்ணப்பம் தொடர்ந்து செல்லுபடியாகும்.

கிரெடிட் கார்டை ஒரு ஆண்டுக்கும் மேலாகப் பயன்படுத்தாமல் இருந்தால், அதை மூடுவதற்கான செயல்முறையை வங்கியும் தொடங்கும். அத்தகைய சூழ்நிலைகளில், வங்கி வாடிக்கையாளருக்குத் தெரிவிக்கும், அந்த அறிவிப்பில் வழங்கப்பட்ட காலக்கெடுவிற்குள் எந்த பதிலும் வராத பட்சத்தில், அனைத்து நிலுவைத் தொகைகளையும் கார்டுதாரர் செலுத்துவதைப் பொறுத்து கார்டு கணக்கை வங்கி மூடும்.

கார்டுதாரரின் விருப்பத்தின் பேரில் கணக்கை மூடும் நேரத்தில், ரிவார்டு பாயிண்ட்கள் இருப்பானது எதிர்மறை எண்ணிக்கையில் இருக்கும் பட்சத்தில், அந்த எதிர்மறை ரிவார்டு பாயிண்ட்களுக்குச் சமமான மதிப்பு தானாகவே ஸ்டேட்மெண்ட் பற்றாக மாற்றப்படும், நிலுவையில் உள்ள பிற தொகைகளுடன் சேர்த்து இதையும் கார்டுதாரர் செலுத்த வேண்டும். கார்டு கணக்கில் நிலுவையில் உள்ள தொகைகள் அனைத்தையும் செலுத்திய பிறகு, நீக்கம் நடைமுறைக்கு வரும். சார்பு விகித அடிப்படையில் எந்த வருடாந்திர, சேருதல் அல்லது புதுப்பித்தல் கட்டணங்களும் ரீஃபண்டு செய்யப்படாது.

எடுத்துக்காட்டு - மூடப்படும் நேரத்தில் எதிர்மறை ரிவார்டு பாயிண்ட் இருப்பு : -1000

மூடப்பட்ட பிறகு, -1000 எதிர்மறை ரிவார்டு பாயிண்ட் இருப்பு, ரூ. 200, அதாவது 1000 எதிர்மறை ரிவார்டு பாயிண்ட்கள், ஒரு ரிவார்டு பாயிண்ட் X ரூ. 0.20 (வெவ்வேறு கார்டு வகைகளுக்கு வேறுபடலாம்) ஸ்டேட்மெண்ட் பற்றாக மாற்றப்படும். இந்தத் தொகையானது கார்டுதாரர் கணக்கிலிருந்து வசூலிக்கப்படும், நிலுவையில் உள்ள வேறு தொகைகளுடன் சேர்த்து இதைக் கார்டுதாரர் செலுத்த வேண்டும்.

## I) கார்டுகள் தொலைந்து போதல் / திருட்டு / தவறாகப் பயன்படுத்தப்படுத்தல்

கார்டு தொலைந்து விட்டாலோ, திருடு போய் விட்டாலோ, உங்களின் பின் அல்லது பிற பாதுகாப்பு விவரங்கள் வேறு யாருக்காவது தெரிந்து விட்டாலோ அல்லது உங்கள் அனுமதியின்றிப் பயன்படுத்தப்பட்டாலோ, நீங்கள் உடனடியாகத் தொலைபேசியில் வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். உடனடியாக அருகிலுள்ள காவல் நிலையத்தில் புகாரளிக்க / முதல் தகவல் அறிக்கை (எ்ஃப்ஐஆர்) பதிவு செய்யப்பட வேண்டும், அதன் நகலை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். தவறாகப் பயன்படுத்தும் பட்சத்தில், கொள்கை விதிமுறைகளையும், நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதைப் பொறுத்து, தொலைந்த கார்டு பொறுப்பின் கீழுள்ள தொகை அளவிற்கே வங்கியின் பொறுப்பு வரையறுக்கப்படும். ATM அல்லது PIN/கடவுச்சொல்/OTP/mPIN/CVV அடிப்படையிலான பரிவர்த்தனைகளுக்குக் கார்டுகளை தவறாகப் பயன்படுத்தினால், அதற்குக் கார்டுதாரரே முழுப் பொறுப்பாவார்.

## J) பின்னை பாதுகாப்பாக வைத்திருப்பது சம்பந்தமான தகவல் தொடர்பு

கார்டைப் பயன்படுத்துவதற்கு அதனுடன் சேர்த்து கார்டுதாரருக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட அடையாள எண் (பின்) அல்லது பின்னாக கார்டுதாரர் தேர்ந்தெடுத்த ஏதேனும் எண் கார்டுதாரருக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டும். அது கார்டுதாரர் மட்டுமே பயன்படுத்துவதற்கானது, யாருக்கும் மாற்றியளிக்க முடியாதது மற்றும் கண்டிப்பாக ரகசியமானது. மூன்றாம் தரப்பினர் தவறாகப் பயன்படுத்த வாய்ப்புள்ளது என்பதால், PIN எண்ணை எந்தவொரு வடிவத்திலும், இடத்திலும் அல்லது முறையிலும் எழுதி வைக்கக் கூடாது. எந்த சந்தர்ப்பத்திலும் அல்லது எந்த விதத்திலும், தன்னிச்சையாகவோ அல்லது வேறு விதத்திலோ, வங்கிப் பணியாளர்களுக்கோ அல்லது வணிக நிறுவனங்களுக்கோ, எந்த மூன்றாம் தரப்பினருக்கும் பின் எண்ணைத் தெரிவிக்கக் கூடாது. கார்டுதாரரைத் தவிர்த்து, கார்டுதாரரின் பின் எண்ணை அளிக்கும் போது வங்கி கவனமாகச் செயல்படும்.

## கார்டுதாரர்களுக்குக் காப்பீட்டுப் பாதுகாப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டுத் திட்டங்கள் கார்டின் வகையைப் பொறுத்து பொருந்துபவையாக இருக்கும். பொருந்தக் கூடிய காப்பீட்டுத் திட்டங்களுக்கு வரவேற்புக் கையேட்டைப் பார்க்கவும்.

**விமான விபத்துக் காப்பீடு**: விபத்து நடைபெறுவதற்கு குறைந்தது 90 நாட்களுக்கு முன்பு ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டை ஒரு வணிக

நிறுவனத்தில் அல்லது ATM -இல் பணம் எடுப்பதற்காக பயன்படுத்தியிருந்து, விமான டிக்கெட்டை ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு மூலம் வாங்கியிருந்தால் மட்டுமே விமான விபத்துக் காப்பீடு செல்லுபடியாகும். ஆக்ஸிஸ் வங்கிக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகள் அனைத்தும் செலுத்தப்படும் வரை, விமான விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் எந்தத் தொகைக்கும் கார்டுதாரரின் நாமினிக்கு உரிமை இல்லை. நிலுவைத் தொகையைச் சரிசெய்வதற்காக, காப்பீட்டுத் தொகைக்கு ஆக்ஸிஸ் வங்கிக்கே முதல் உரிமை /பற்றுரிமை இருக்கும்.

**குறிப்பு: அக்டோபர் 31, 2022 முதல் விமான விபத்துக் காப்பீடு நிறுத்தப்பட்டுள்ளது.**

**பூஜ்ஜிய தொலைந்த கார்டு பொறுப்பு:** மோசடியான கொள்முதல் பரிவர்த்தனைகளுக்கு எதிரான பாதுகாப்பு கிடைக்கிறது, கார்டு தொலைந்து விட்டதை கார்டுதாரர் ஆக்ஸிஸ் வங்கிக்குத் தெரிவித்ததிலிருந்து அறிக்கையிடும் காலகட்டத்திற்கு 30 நாட்களுக்கு முன்பு வரை பாதுகாப்பு கிடைக்கும். இந்தப் பாதுகாப்பு மோசடியான பேமெண்ட் பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும், இதற்கு கட்டாயமாக முதல் தகவல் அறிக்கையைப் பெற்று வழங்க வேண்டும். இந்தக் காப்பீட்டுப் பாதுகாப்பு ATM மற்றும் பின்/கடவுச்சொல்/OTP/mPIN/CVV அடிப்படையிலான பரிவர்த்தனைகளுக்குச் செல்லுபடியாகாது.

**கொள்முதல் பாதுகாப்பு:** கிரெடிட் கார்டில் கொள்முதல் செய்த 90 நாட்களுக்குள் தீ அல்லது திருட்டுக்கு எதிரான பாதுகாப்பு, இதற்கு கண்டிப்பாக FIR பெற்று சமர்ப்பிக்க வேண்டும். வாடிக்கையாளர் தரப்பின் அலட்சியத்தால் ஏற்படும் இழப்புகளுக்கு காப்பீடு வழங்கப்படாது. நகைகள் மற்றும் கெட்டுப் போகக் கூடிய பொருட்களுக்கு காப்பீடு கிடையாது.

**விலைப் பாதுகாப்பு:** ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு மூலம் ஒரு பொருளுக்குப் பேமெண்ட் செய்யப்பட்ட விலைக்கும், அதே பொருளுக்கு (அதே பிராண்டு, தயாரிப்பு, மாடல் பெயர் மற்றும்/அல்லது எண்) குறைவான விலையில் விளம்பரப்படுத்தப்பட்ட விலைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை, இந்தக் காப்பீடு திருப்பிச் செலுத்தும். 2500 ரூபாய்க்கு மேல் அசல் கொள்முதல் விலையுடைய தயாரிப்புக்கு அமேசான், ஃபிளிப்கார்ட் அல்லது நம்பகமான ஆன்லைன் கொள்முதல் இயங்குதளத்திற்கு மட்டுமே இந்தக் காப்பீடு பொருந்தும். குறைவான விலை அதே ஈ-காமர்ஸ் நிறுவனத்தில் இருக்க வேண்டும், அச்சிடப்பட்ட விளம்பரம் 3 நாட்களுக்குள் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். அச்சிடப்பட்ட விளம்பரத் தேதியில் இருந்து 7 நாட்களுக்குள் கொள்முதல் செய்து, கிளைம் செய்திருக்க வேண்டும். (இந்த அம்சத்தின் கீழ் காப்பீடு பெறுபவை பற்றிய விவரங்களுக்கு வங்கியை அணுகவும்)

**கிரெடிட் ஷீல்டு:** தற்செயலான மரணம் ஏற்பட்டால், கார்டில் உள்ள நிலுவைத் தொகையில் ஒரு குறிப்பிட்ட தொகை வரையில் காப்பீடு வழங்கும்.

**செக் -இன் பேக்கேஜில் தாமதம்:** வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் போது, 6 மணி நேரத்திற்கும் மேலாக பேக்கேஜ் தாமதம் ஏற்பட்டால், அடிப்படைத் தேவைகளுக்கு தேவையான பொருட்களின் செலவுத் தொகையை திருப்பி வழங்குகிறது. ஆக்ஸிஸ் வங்கி கிரெடிட் கார்டு மூலம் விமான டிக்கெட் வாங்கியிருந்தால் மட்டுமே இது செல்லுபடியாகும். செக்டு-இன் பேக்கேஜ் என்பது, காப்பீடு செய்யப்பட்டுள்ளவரால் ஒப்படைக்கப்பட்டு, காப்பீடு செய்யப்பட்டவர் பயணிக்கும் அதே போக்குவரத்து முறையில் கொண்டு செல்வதற்கு இந்தியாவிற்கு வெளியே உள்ள சர்வதேச ஏர்லைன்ஸ் / கேரியரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தக் கேரியர் பேக்கேஜ் ரசீது வழங்கிய பொருட்களைக் குறிக்கும்.

**செக்-இன் பேக்கேஜ் தொலைதல்:** வெளிநாட்டுப் பயணத்தின் போது பொருட்கள் தொலைந்து போவது அல்லது சேதமடைவதற்கு காப்பீடு அளிக்கிறது. விமான டிக்கெட்டை ஆக்ஸிஸ் வங்கி கிரெடிட் கார்டு மூலம் வாங்கியிருந்தால் மட்டுமே இது செல்லுபடியாகும். செக்டு-இன் பேக்கேஜ் என்பது, காப்பீடு செய்யப்பட்டுள்ளவரால் ஒப்படைக்கப்பட்டு, காப்பீடு செய்யப்பட்டவர் பயணிக்கும் அதே போக்குவரத்து முறையில் கொண்டு செல்வதற்கு இந்தியாவிற்கு வெளியே உள்ள சர்வதேச ஏர்லைன்ஸ் / கேரியரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தக் கேரியர் பேக்கேஜ் ரசீது வழங்கிய பொருட்களைக் குறிக்கும்.

**பயண ஆவணங்கள் தொலைதல்:** வெளிநாட்டுப் பயணத்தின் போது தொலைந்த பாஸ்போர்ட் / பிற பயண ஆவணங்களுக்கான விண்ணப்பக் கட்டணம் உட்பட, பாஸ்போர்ட் பெறுவதற்கு ஏற்படும் செலவுகளுக்கு காப்பீடு அளிக்கிறது விமான டிக்கெட்டை ஆக்ஸிஸ் வங்கி கிரெடிட் கார்டு மூலம் வாங்கியிருந்தால் மட்டுமே இது செல்லுபடியாகும்.

## K) கொடாநிலை

1) கொடாநிலை ஏற்படும் சூழ்நிலையில், அதாவது, பேமெண்ட் தவணைத் தேதிக்குள் குறைந்தபட்ச நிலுவைத் தொகையை செலுத்தவில்லை அல்லது கார்டு உறுப்பினர் ஒப்பந்தத்தின் ஏதேனும் பிரிவை மீறியுள்ளார் என்றால், கடிதம், ஃபேக்ஸ், தொலைபேசி, மின்னஞ்சல், SMS மற்றும் / அல்லது நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக நியமிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினர் மூலம் அவ்வப்போது கார்டுதாரருக்கு நினைவூட்டப்படும். அவ்வாறு நியமிக்கப்பட்ட எந்தவொரு மூன்றாம் தரப்பினரும், கடன் வசூலுக்கான இந்திய வங்கி சங்கத்தின் (IBA) நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

2) பேமெண்ட் ஓவர்டியூ இல்லாத போது பேமண்ட் தவணைத் தேதியில் இருந்து 3 நாட்கள் சலுகைக் காலம் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும். பணம் செலுத்தும் நேரத்தின் அடிப்படையில் இந்த வசதி வழங்கப்படுகிறது, ஆனால் கிரெடிட் கார்டு ஸ்டேட்மெண்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பேமெண்ட் தவணைத்

தேதிக்குள் வாடிக்கையாளர் தனது நிலுவைத் தொகையைச் செலுத்த வேண்டும்.

3) நாட்களுக்கு மேல் ஒரு கிரெடிட் கார்டு கணக்கு 'நிலுவை கடந்ததாக' இருக்கும் போது, கடன் தகவல் நிறுவனங்களுக்கு (CIC-களுக்கு) அந்த கிரெடிட் கார்டு கணக்கை 'நிலுவை கடந்தது' என வங்கி தெரிவிக்கும், மேலும் தாமத பேமெண்ட் கட்டணம் வசூலிக்கும். 'நிலுவை கடந்ததாக இருக்கும் நாட்களின்'எண்ணிக்கையும், தாமத பேமெண்ட் கட்டணமும் கிரெடிட் கார்டு ஸ்டேட்மெண்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பேமெண்ட் தவணைத் தேதியிலிருந்து கணக்கிடப்படும்.

4) கார்டுதாரர் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை என்றால், வங்கி தனது தனிப்பட்ட சுய விருப்பத்தின் பேரில், பின்னுவருவனவற்றை மேற்கொள்ளும் உரிமையைக் கொண்டுள்ளது:

a. கார்டுதாரரின் கிரெடிட் கார்டு வசதிகள் அனைத்தையும் திரும்பப் பெறுவதற்கு
b. கார்டுதாரின் கார்டில் நிலுவையில் உள்ள நிலுவைத் தொகை அனைத்தையும் உடனடியாகச் செலுத்துமாறு அவரிடம் கேட்பதற்கு
c. வங்கியில் கார்டுதாரரின் பெயரில் இருக்கும் பணம் / வைப்புத் தொகைகள் / கணக்குகளில் இருந்து நிலுவையில் உள்ள தொகையை பற்றுரிமை செய்ய மற்றும் வசூலிக்க வங்கிக்கு உள்ள உரிமையைப் பயன்படுத்துவதற்கு.

5) கொடாநிலை ஏற்படும் சூழ்நிலையால், சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டவாறு கடன் தகவல் பீரோக்களுக்கு அல்லது அது போன்ற பிற முகமைகளுக்கு கொடாநிலை அறிக்கையை வங்கி அனுப்பலாம். பேமெண்ட் தவணைத் தேதிக்கும், பில்லிங் ஸ்டேட்மெண்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பில்லிங் தேதிக்கும் இடையேயுள்ள கால அளவானது, ஒரு கார்டுதாரரை கொடாநிலையில் உள்ளவர் என அறிவிப்பதற்கான அறிவிப்பு காலமாகக் கருதப்படுகிறது.

6) கொடாநிலை அறிக்கையை திரும்பப் பெறுவதற்கான நடைமுறை மற்றும் நிலுவைத் தொகையைச் செலுத்திய பிறகு கொடாநிலை அறிக்கையை திரும்பப் பெறுவதற்கான கால அளவு:

*சிபில் பரிந்துரைத்த வடிவத்தில் ஒவ்வொரு மாதமும் சிபில் - கடன் தகவல் ஆணையம் (இந்தியா) லிமிடெட்டிடம் கார்டுதாரர் விவரங்களை வங்கி சமர்ப்பிக்கும். அந்த விவரங்களில் அனைத்து கார்டுதாரர்களின், கொடாநிலை மற்றும் நடப்பில் உள்ளவர்களின், முந்தைய மாதத்திற்கான திருப்பிச் செலுத்தும் நிலை பற்றிய விவரங்கள் இருக்கும். சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களை அடுத்த முப்பது நாட்களில் சிபில் தனது சர்வரில் பதிவேற்றுகிறது.-

5). கார்டுதாரருக்கு மரணம் / நிரந்தர இயலாமை ஏற்படும் போது நிலுவைத் தொகையை வசூலித்தல்: மொத்த நிலுவைத் தொகையும் (பில்லிங் செய்யாத பரிவர்த்தனைகள் உட்பட) உடனடியாக நிலுவையில் சேர்க்கப்பட்டு, ஆக்ஸிஸ் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டும். கார்டுதாரரின் மேற்பார்வையாளரிடம் இருந்து மொத்த நிலுவைத் தொகையையும் வசூலிக்கும் உரிமை ஆக்ஸிஸ் வங்கிக்கு உள்ளது. வங்கியில் கார்டுதாரரின் பெயரிலுள்ள பணம் / வைப்புத் தொகைகள் / கணக்குகளில் இருந்து மொத்த நிலுவைத் தொகையையும் மீட்டெடுக்கும் உரிமையும் வங்கிக்கு உள்ளது.

## L) அறிவிப்பு

ஆக்ஸிஸ் வங்கியானது, RBI அங்கீகாரம் பெற்ற கிரெடிட் பீரோக்களுடன் இணைந்து செயல்படலாம், உங்கள் தற்போதைய இருப்பு, பேமெண்ட் வரலாறு, மக்கள்தொகை சார்ந்த விவரங்கள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய ஆனால் இவை மட்டும் என வரையறுக்காமல் கடன் தகவலைப் பகிர்ந்து கொள்ளலாம். கடன் வழங்கலாமா, வேண்டாமா என்பதைப் பற்றி எந்தவொரு கருத்தோ, குறிப்போ, அறிவுரையோ கிரெடிட் பீரோக்கள் வழங்காது. சரியான நேரத்திற்குத் தவணைகளைச் செலுத்துவதன் மூலம் நல்ல கிரெடிட் ஸ்கோரைப் பராமரிப்பது உங்களுக்கு நன்மையளிக்கும். கிரெடிட் பீரோக்கள் இருப்பதால், பொறுப்பான வாடிக்கையாளர்கள், கடன் வழங்குபவர்கள் வேகமான மற்றும் அதிக போட்டித்தன்மையுள்ள சேவைகளை வழங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். வாடிக்கையாளர்களின் கொடாநிலை விவரங்கள் கிரெடிட் பீரோக்களில் கிடைப்பதால் எதிர்காலத் தேவைகளுக்கு நீங்கள் கடன் பெறுவதற்கான உங்கள் கடன் பெறும் தகுதியைப் பாதிக்கும். வாடிக்கையாளர் தகவல்களை மாதாந்திர அடிப்படையில் அல்லது வங்கியும் கிரெடிட் பீரோக்களும் ஒப்புக்கொள்ளும் வேறு கால இடைவெளியில் ஆக்ஸிஸ் வங்கி கிரெடிட் பீரோக்களுக்குத் தெரிவிக்கும்.
ஏதேனும் பில்லிங் முரண்பாடு பற்றி ஆக்ஸிஸ் வங்கியிடம் தெரிவிக்கப்படும் பட்சத்தில், அந்த முரண்பாடு தீர்க்கப்படும் வரை கிரெடிட் பீரோக்களுக்கு அறிக்கையளிப்பதை வங்கி நிறுத்தி வைக்கும். ஆக்ஸிஸ் வங்கி பொருத்தமானது மற்றும் அவசியமானது எனக் கருதினால், கார்டுதாரர் தனது கடமையை நிறைவேற்றுவதன் மூலம் கொடாநிலை தொடர்பான தகவல்கள் உட்பட, கார்டுதாரர் / ஆட்-ஆன் கார்டுதாரர் (கள்) தொடர்பான தகவல்களை வங்கியால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் எந்தவொரு ஏற்கனவே இருக்கும் அல்லது அதற்கு மேற்பட்ட கிரெடிட் பீரோக்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு ஆக்ஸிஸ் வங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதைக் கார்டுதாரர் ஒப்புக்கொள்கிறார். அதற்கேற்ப, அந்தக் கிரெடிட் பீரோக்களுக்கு தகவல்களை அளிப்பதற்கு ஆட்-ஆன் கார்டுதாரர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். அந்த நிறுவனங்கள், வங்கிகள் / நிதி நிறுவனங்கள் மற்றும் பிற கடன் வழங்குபவர்களுக்கு செயலாக்கப்பட்ட கூடுதல் தகவல் அல்லது விவரங்களை அல்லது தயாரிப்புகளை வழங்கலாம். கிரெடிட் பீரோக்கள் என்பதில் கிரெடிட் பீரோக்கள், கடன் சரிபார்ப்பு ஏஜென்சிகள், கடன் தகவல் நிறுவனங்கள் அல்லது கடன் வாங்குபவர்கள் தொடர்பான கடன் தகவல்களைச் சேகரித்தல்,

தொகுத்தல் மற்றும் பரப்புதல் நோக்கங்களுக்காக RBI உருவாக்கியுள்ள மற்றும் அங்கீகரித்துள்ள வேறு எந்த நிறுவனமும் அடங்கும்.

ஆக்ஸிஸ் வங்கி / அதன் கூட்டாளர் நிறுவனங்கள் / துணை நிறுவனங்கள் / முகவர்களிடமிருந்து நேரடி சந்தைப்படுத்தல் அல்லது டெலி காலிங் / டெலிசேல்ஸ் அழைப்புகளைப் பெற கார்ட்தாரர் விரும்பவில்லை என்றால், 'டிராய்' இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள விவரங்களுக்கேற்ப 'வழங்குபவர் வாடிக்கையாளர் விருப்பப் பதிவேட்டில்' பதிவுசெய்து அந்தச் சேவையை நிறுத்தலாம்.

மற்ற வணிகர்/கார்ப்பரேட் நிறுவனங்களுடன் இணைந்து ஆக்ஸிஸ் வங்கி, கோ-பிராண்டு கிரெடிட் கார்டுகளை வழங்குகிறது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் வருவாய்/கட்டணங்களை கூட்டாளர் வணிகர்/கார்ப்பரேட்டுடன் வங்கி பகிர்ந்து கொள்ளலாம். வாடிக்கையாளர்கள் வங்கிக்கு வழங்கும் விவரங்களை, பதிவுசெய்தல், கார்டு அம்சத்தை நிறைவேற்றுதல், சந்தைப்படுத்தல், விளம்பர நடவடிக்கைகள் மற்றும் பலன்களை ரெடீம் செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக கோ-பிராண்டு கூட்டாளராகச் செயல்படும் மைல்ஸ் அண்ட் மோர், விஸ்டாரா ஏர்லைன்ஸ், சாம்சங், ஸ்பைஸ்ஜெட் ஆகிய நிறுவனங்களுக்கு வங்கி பகிர்ந்து கொள்வதற்கும், வெளிப்படுத்துவதற்கும் வாடிக்கையாளர்கள் வெளிப்படையாக ஒப்புதல் அளிக்கிறார்கள். இது, ஆக்ஸிஸ் பேங்க் மைல்ஸ் & மோர் உவேர்ல்டு செலக்ட் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் மைல்ஸ் & மோர் வேர்ல்டு கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் விஸ்டாரா இன்ஃபினைட் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் விஸ்டாரா சிக்னேச்சர் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் விஸ்டாரா பிளாட்டினம் கிரெடிட் கார்டுகள், சாம்சங் ஆக்ஸிஸ் பேங்க் இன்பிஃனைட் கிரெடிட் கார்டு, சாம்சங் ஆக்ஸிஸ் பேங்க் சிக்னேச்சர் கிரெடிட் கார்டு, ஸ்பைஸ்ஜெட் ஆக்ஸிஸ் பேங்க் வோயேஜ் பிளாக் கிரெடிட் கார்டு மற்றும் ஸ்பைஸ்ஜெட் ஆக்ஸிஸ் பேங்க் வோயேஜ் கார்டு போன்ற கோ-பிராண்டு கிரெடிட் கார்டுகளுக்குப் பொருந்தும். மைல்ஸ் அண்ட் மோர், விஸ்டாரா ஏர்லைன்ஸ், சாம்சங், ஸ்பைஸ்ஜெட் ஆகியவை கோ-பிராண்டு கூட்டாளர் நிறுவனங்களாகும்.

ஆக்ஸிஸ் வங்கி, பல்வேறு சிறப்பம்சங்களையும், நன்மைகளையும் கொண்ட கிரெடிட் கார்டுகளை வழங்குகிறது. அதை வழங்குவதற்காக, வவுச்சர்கள்/ தள்ளுபடிகள்/ கேஷ்பேக்குகள்/ மெம்பர்ஷிப்கள் / கார்டு பாதுகாப்புத் திட்டங்கள், கிரெடிட் ஷீல்டு, சுகாதாரக் காப்பீட்டுத் திட்டங்கள் போன்ற காப்பீடு போன்ற வகைகளில் கார்டுதாரருக்கு தயாரிப்பின் அம்சங்கள்/பலன்கள்/ மற்றும் பிற மதிப்புக் கூட்டப்பட்ட சேவைகளை வழங்குவதற்காக ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு சேவை வழங்குநர்களை ஆக்ஸிஸ் வங்கி பணியமர்த்தியுள்ளது, பதிவுசெய்தல், கார்டு அம்சத்தைப் பூர்த்தி செய்தல், சந்தைப்படுத்தல், விளம்பர நடவடிக்கைகள் மற்றும் பலன்களை ரெடீம் செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக,.ஆக்ஸிஸ் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர்களிடம் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் முக்கியமான தனிப்பட்ட தகவல்கள் (“தனிப்பட்ட தரவு”) உள்ளிட்ட, கார்டுதாரரின் தனிப்பட்ட தரவுகளைப் பெற, சேகரிக்க, செயலாக்க, பதிவு செய்ய, பகிர மற்றும் வெளியிட

கார்டுதாரர்கள் ஆக்ஸிஸ் வங்கிக்கு வெளிப்படையாக ஒப்புதல் அளித்துள்ளனர். ஆக்ஸிஸ் பேங்க் நியோ கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் மை சோன் கிரெடிட் கார்டு, இந்தியன் ஆயில் ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் ரிவார்ட்ஸ் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் அட்லஸ் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் செலக்ட் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் பிரிவில்லேஜ் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் இன்ஃபினைட் ரிசர்வ் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் மேக்னஸ் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் பிரைட் கிரெடிட் கார்டுகள், ஆக்ஸிஸ் பேங்க் அட்வாண்டேஜ் கிரெடிட் கார்டு, ஆக்ஸிஸ் பேங்க் ஆரா கிரெடிட் கார்டு போன்ற பொருந்தக்கூடிய அனைத்து கிரெடிட் கார்டுகளுக்கும் அந்த ஒப்புதல் செல்லுபடியாகும் என்பதைக் கார்டுதாரர் புரிந்துகொண்டு, ஒப்புக்கொள்கிறார்.

காப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து ஆக்ஸிஸ் வங்கி, தொலைந்த கார்டுகள், கார்டு மோசடிகள் போன்றவற்றால் ஏற்படும் பொறுப்புகளை கவனித்துக்கொள்ள, ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டுடன் காப்பீட்டுப் பாதுகாப்பை ("காப்பீட்டுப் பாதுகாப்பு") வழங்குகிறது. ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டுடன் கிடைக்கும் இந்தக் காப்பீட்டுத் திட்டங்களில் எதையேனும் கார்டுதாரர் பெற்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளையும், நிபந்தனைகளையும் படித்து, புரிந்துகொண்டு, ஒப்புக்கொண்டதாக கார்டுதாரர் உறுதிப்படுத்துகிறார்:

i. ஆக்ஸிஸ் பேங்க் கிரெடிட் கார்டு தொடர்பான காப்பீட்டுப் பாதுகாப்பை வழங்குவதற்காகத் தொடர்பு கொள்வதற்கும், அந்தக் காப்பீட்டுப் பாதுகாப்பைப் பெறுவதற்காக கார்டுதாரரின் தனிப்பட்ட தரவைச் செயலாக்குவதற்கும் ("நோக்கம்")., ஆக்ஸிஸ் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர்கள் மற்றும்/அல்லது கூட்டாளர் காப்பீட்டு நிறுவனங்களுடன் தனது தனிப்பட்ட தரவைப் பகிர்ந்து கொள்ள, இதன் மூலம் ஆக்ஸிஸ் வங்கிக்கு கார்டுதாரர் வெளிப்படையான ஒப்புதலை வழங்குகிறார்.

ii. கார்டுதாரரின் தனியுரிமையைப் பாதுகாப்பதற்கு ஆக்ஸிஸ் வங்கி உறுதி கொண்டுள்ளது, எந்தவொரு தனிப்பட்ட தரவும், பொருந்தக்கூடிய தரவுப் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கேற்ப ஆக்ஸிஸ் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர்கள் மற்றும்/அல்லது கூட்டாளர் காப்பீட்டு நிறுவனங்களுடன் மட்டுமே பகிரப்படும். ஆக்ஸிஸ் வங்கியும், அதன் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர்கள்/கூட்டாளர் காப்பீட்டு நிறுவனங்களும் நோக்கத்திற்காக தனிப்பட்ட தரவைப் பகிர்ந்து கொள்ளும் போது, தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதற்குத் தேவையான நியாயமான பாதுகாப்பு நடவடிக்கைகளைச் மேற்கொள்ளும்.

iii நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் இந்த அழைப்புகளின் எண்ணிக்கை நியாயமானதாகவும், தொடர்புடைய விதிமுறைகளுக்கு உட்பட்டும் இருப்பதை ஆக்ஸிஸ் வங்கி உறுதிப்படுத்தும்.

கார்டுதாரரை அசௌகரியப்படுத்தாமல் மதிப்புவாய்ந்த தகவல்களை வழங்க ஆக்ஸிஸ் வங்கி பாடுபடுகிறது.

iv. இந்த விதிமுறைகளையும், நிபந்தனைகளையும் மாற்றுவதற்கு ஆக்ஸிஸ் வங்கிக்கு உரிமையுள்ளது. ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட்டால் தகுந்த முறையில் கார்டுதாரருக்குத் தெரிவிக்கப்படும்.

விண்ணப்பித்த நாளிலிருந்து கிரெடிட் கார்டு டெலிவரி TAT 14 நாட்களாக இருக்கும் அதே நேரத்தில், கிரெடிட் கார்டுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான நேரம் வேறுபடலாம் என்று கார்டுதாரருக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கிரெடிட் கார்டு விண்ணப்பத்தில் தனது பெயரில் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணை வழங்கியதாக கார்டுதாரர் ஒப்புக் கொள்கிறார். கிரெடிட் கார்டு விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட மொபைல் எண் கார்டுதாரரின் பெயரில் பதிவு செய்யப்படவில்லை என்பது பின்னர் கண்டறியப்பட்டால், கிரெடிட் கார்டில் உள்ள மொபைல் எண் மூலம் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும்/பரிவர்த்தனைக்கும் அவர்களே பொறுப்பாவார்கள்.

இந்திய வங்கி விதிமுறைகள் மற்றும் தரநிலைகள் குழுவில் (BCSBI) ஆக்ஸிஸ் வங்கி உறுப்பினராக உள்ளது. BCSBI விதிமுறையின் கீழ் எங்களின் உறுதிமொழிகளைக் காண, எங்கள் இணையதளத்தின் முகப்புப் பக்கத்தைப் பார்வையிடவும்.

## M. நடுவர் தீர்ப்பு உட்பிரிவு விதி

இந்த ஆவணங்களில் இருந்து அல்லது இங்கு குறிப்பிடப்படும் பொருள் அல்லது விளைவு அல்லது உரிமை, கடமைகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவை, எந்த வகையிலும் தொடுதல் அல்லது அதைப் பற்றிய அக்கறையால் எழும் அனைத்து சச்சரவுகள், வேறுபாடுகள் மற்றும் / அல்லது கிளைம்கள் அல்லது கேள்விகள், நடுவர் மன்றம் மற்றும் சமரசச் சட்டம், 1996, அல்லது அதன் ஏதேனும் சட்டரீதியான திருத்தங்களின்படி நடுவர் மன்றத்திற்கு அல்லது கடன் வழங்குபவர்/வங்கியால் பரிந்துரைக்கப்படும் ஒரு தனி நடுவருக்கு அனுப்பப்பட்டு, தீர்த்து வைக்கப்படும். அவ்வாறு நியமிக்கப்பட்ட நடுவரின் மரணம், விருப்பமின்மை, மறுப்பு, புறக்கணிப்பு, இயலாமை அல்லது திறமையின்மை ஏற்பட்டால், ஒரு நடுவராகச் செயல்பட, கடன் வழங்குபவர் / வங்கி ஒரே நடுவராக ஒரு புதிய நடுவரை நியமிக்கலாம். தீர்ப்புக்கான காரணம் எதையும் நடுவர் தெரிவிக்க வேண்டியதில்லை மற்றும் நடுவரின் தீர்ப்பே இறுதியானது, தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் அது கட்டுப்படுத்தும். நடுவர் மன்ற நடவடிக்கைகள் மும்பையில் மட்டுமே நடைபெறும்.

## N. தடைசெய்தல் உட்பிரிவு விதி

லாட்டரி டிக்கெட்கள், தடைசெய்யப்பட்ட பத்திரிக்கைகள் ஆகியவற்றை வாங்குவது, ஸ்வீப்ஸ்டேக்குகளில் பங்கேற்பது, திரும்ப அழைக்கும் சேவைகளுக்கான பேமெண்ட் மற்றும் / அல்லது அந்நியச் செலாவணி எடுப்பது, அனுமதிக்கப்படாத பொருட்கள் / நடவடிக்கைகள் போன்ற தடைசெய்யப்பட்ட பொருட்களை வாங்குவதற்கு சர்வதேச கிரெடிட் கார்டுகளை இன்டர்நெட்டிலோ அல்லது வேறுவிதமாகவோ பயன்படுத்த முடியாது.

## O. ஃபெமா (அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம்)

i) இந்தியாவிற்கு வெளியே பரிவர்த்தனை செய்வதற்கு, RBI இன் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகள் மற்றும் அந்நியச் செலாவணி மேலாண்மை சட்டம், 1999 உள்ளிட்ட, பொருந்தக்கூடிய சட்டத்திற்கு இணங்கி காரடைப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், நீங்கள் தண்டனை நடவடிக்கைக்கு ஆளாக நேரிடலாம்.

ii) எலக்ட்ரானிக் / இன்டர்நெட் டிரேடிங் போர்ட்டல்கள் மூலம் வெளிநாட்டு அந்நியச் செலாவணி வர்த்தகத்திற்காக நேரடியாக / மறைமுகமாகப் பேமெண்ட் செய்வதற்காக கிரெடிட் கார்டைப் பயன்படுத்த முடியாது. ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின்படி அது தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு, எங்கள் இணையதளத்தைப் பார்வையிடவும்.

iii) இந்தக் கார்டை இந்தியாவிலும், வெளிநாட்டிலும் பயன்படுத்தலாம். ஆனாலும், நேபாளத்திலும், பூட்டானிலும் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள முடியாது.

iv) ஆக்ஸிஸ் வங்கி NRE கணக்கிலிருந்து ஆட்டோ-பே முறையில் 100% பேமெண்ட் செய்ய வேண்டியது NRI வாடிக்கையாளர்களுக்கு மட்டும் கட்டாயமாகும்.

v) NRI வாடிக்கையாளர்களுக்கு பண பேமெண்ட் ஏற்றுக்கொள்ளப்படாது.

## P) கார்டு கணக்கில் அங்கீகரிக்கப்படாத எலக்ட்ரானிக் வங்கி பரிவர்த்தனைகள்

1) சரியான மொபைல் எண்களை வங்கிக்கு வழங்காத வாடிக்கையாளர்களுக்கு, ATM-களில் பணம் எடுப்பதைத் தவிர்த்து, வேறு எலக்ட்ரானிக் பரிவர்த்தனை வசதியை வங்கி வழங்காது.

2) பரிவர்த்தனைகளில்/வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் ஏதேனும் ஸ்டேட்மெண்ட்/ பதிவுகளில் உள்ள இருப்பு விவரங்களில் ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால், ஏழு (7) நாட்களுக்குள் வங்கிக்கு எழுத்துப்பூர்வமாக வாடிக்கையாளர் தெரிவிக்க வேண்டும்

3) ஏழு (7) வேலை நாட்களுக்குப் பிறகு வங்கிக்குத் தகவல் கிடைக்கும் பட்சத்தில், வங்கியின் இணையதளத்தில் கிடைக்கின்ற, வங்கியின் இயக்குனர் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைக்கேற்ப வாடிக்கையாளர்களின் பொறுப்பு தீர்மானிக்கப்படும்.

4) இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, மின்னணு அல்லது ஆவண வடிவத்தில் வங்கியால் பராமரிக்கப்படும் உங்கள் அறிவுறுத்தல்கள் மற்றும் பிற விவரங்கள் (பேமெண்ட்கள் செலுத்துதல் மற்றும் பெறுதல் உட்பட, ஆனால் அவை மட்டுமே அல்ல) ஆகியவை, அந்த அருவுறுத்தல்களுக்கும், பிற விவரங்களுக்கும் இறுதியான சான்றாக உங்களுக்கு எதிராகக் கருதப்படும்.

5) புகாரளிக்கும் காலம் மற்றும்/அல்லது கணக்கில் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனை/கள் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட கணக்கு தொடர்பான வேறு ஏதேனும் முரண்பாடு ஏற்படும் பட்சத்தில், காலம் மற்றும்/அல்லது முரண்பாடு ஏற்பட்ட பரிவர்த்தனையின் நம்பகத்தன்மையைத் தீர்மானிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது. மூன்றாம் தரப்பு மோசடி அல்லது மோசடியில் உங்களுக்குத் தொடர்பு இல்லாமல் உங்கள் கார்டு கணக்கில் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் நடந்தால், "வாடிக்கையாளர் பாதுகாப்பு- அங்கீகரிக்கப்படாத எலக்ட்ரானிக் வங்கிப் பரிவர்த்தனைகளில் வாடிக்கையாளர்களின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு" என்ற RBI சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கேற்ப, உங்கள் பொறுப்பு வரையறுக்கப்படும். அவ்வப்போது திருத்தப்படுவதற்கேற்ப ஒழுங்குமுறைகளில் செய்யப்படும் மாற்றங்கள் அந்த நேரத்திற்குப் பொருந்தும் மற்றும் கட்டுப்படுத்தும்.

6) வாடிக்கையாளர் சேவை /வாடிக்கையாளர் திருத்தப்பட்ட தொடர்பு விவரங்களுக்கு, எங்கள் இணையதளம் **www.axisbank.com/support** -ஐப் பார்க்கவும்

## Q) பாதுகாக்கப்பட்ட கிரெடிட் கார்டுகள்

1) பாதுகாக்கப்பட்ட கிரெடிட் கார்டுகள் அல்லது வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் வசதியின் கீழ் வாடிக்கையாளர் வங்கிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகள் அனைத்திற்கான இறுதி இருப்புக்குத் தொடர்ச்சியாகப் பாதுகாப்பாளிக்கும் விதத்தில் நிலையான வைப்புச் செயல்படும்.

2) கொடாநிலை அல்லது கோரும் போது கடன் வசதியை அல்லது வசதிகளைத் திருப்பிச் செலுத்தாத பட்சத்தில், வாடிக்கையாளரின் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நியாயமானது மற்றும் தகுந்தது என வங்கி கருதும் போது, எந்த நேரத்திலும் வங்கியின் கிளைகளில் உள்ள கணக்கில் (கணக்குகளில்)

நிலையான/கால வைப்புத் தொகையை முன்கூட்டியே பணமாக்குவதற்கு அல்லது செட்-ஆஃப் செய்வதற்கு அல்லது பத்திரங்கள்/நிலையான அல்லது கால வைப்புகளை அப்லிஃப்ட் செய்வதற்கு அல்லது நிறுத்தி வைப்பதற்கு அல்லது அதை பரிமாறுவதற்கு/ஒதுக்கீடு செய்வதற்கு அல்லது மறு ஒதுக்கீடு செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் வங்கி எடுக்கலாம்.

3) வாடிக்கையாளரின் தகுதியின் அடிப்படையில் பாதுகாக்கப்பட்ட கிரெடிட் கார்டுடன் இணைக்கப்பட்ட நிலையான வைப்புத் தொகையிலிருந்து பற்றுரிமையைத் தனது தனிப்பட்ட சுய விருப்பத்தின் பேரில் நீக்குவதற்கு வங்கிக்கு உரிமை உள்ளது.

## R) சிறப்புக் குறிப்புக் கணக்கு (SMA) மற்றும் செயல்படாத சொத்து (NPA) என வகைப்படுத்துதல்

ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின் விதிமுறைகளுக்கேற்ப, கொடாநிலையில் உடனடியாக, சிறப்புக் குறிப்புக் கணக்குகளாக (SMA) வகைப்படுத்துவதன் மூலம், கடன் வழங்குபவர்கள் கடன் வாங்குபவர்களின் கணக்குகளில் ஆரம்ப நிலையில் உள்ள அழுத்தத்தை கண்டறிய வேண்டும். தொடர்புடைய தேதிக்கான நாள்-இறுதிச் செயல்முறையின் ஒரு பகுதியாக கடன் பெறுவோர் கணக்குகளை SMA, NPA என வகைப்படுத்த வேண்டும், SMA அல்லது NPA என வகைப்படுத்தும் தேதியானது நாள்-இறுதிச் செயல்முறை இயங்கிக் கொண்டிருக்கும் காலண்டர் தேதியாக இருக்கும். அதற்கேற்ப, அந்தக் காலண்டர் தேதியின் நாள்-இறுதியில் கணக்கின் சொத்து வகைப்படுத்தல் நிலையை SMA/NPA தேதி பிரதிபலிக்கும். அதுபோன்ற வகைப்படுத்தலுக்கான விளக்கம் பின்வருமாறு:

- **SMA 0** - கடன் கணக்கின் தவணைத் தேதி மார்ச் 31, 2021 ஆக இருந்து, அந்தத் தேதியில் முழு நிலுவைத் தொகையும் செலுத்தப்படவில்லை என்றால், அந்தக் கணக்கு மார்ச் 31, 2021 இன் நாள்-இறுதியில் SMA 0 ஆக இருக்கும்.
- **SMA 1** - தொடர்ந்து அது ஓவர்டியூவாக இருந்தால், தொடர்ந்து 30 நாட்களுக்கு, அதாவது ஏப்ரல் 30, 2021 வரை ஓவர்டியூவாக இருந்த பிறகு அந்தக் கணக்கு SMA-1 ஆகக் குறிக்கப்படும்.
- **SMA 2** - அதன் பின்னரும் அந்தக் கணக்கு தொடர்ந்து ஓவர்டியூவாக நீடித்தால், மே 30, 2021 ஆம் தேதி அது SMA-2 ஆகக் குறிக்கப்படும்
- **NPA** – அதற்கு மேலும் கணக்கு ஓவர்டியூவாக நீடித்தால், ஜூன் 29, 2021 ஆம் தேதி அது NPA ஆக வகைப்படுத்தப்படும்

RBI வழிகாட்டுதல்களுக்கேற்ப, கணக்குகளை NPA என வகைப்படுத்துவது கடன் வாங்குபவர் வாரியாகத் தான் செய்யப்படுகிறது, கடன் வாரியாக அல்ல, எனவே, வங்கியிலிருந்து ஏதேனும் கடன் பெறும் போது, வாடிக்கையாளர் நிலுவைத் தொகையை செலுத்தாமல் இருந்தால் அந்தக் கணக்கு NPA என வகைப்படுத்தப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.மேலும், வங்கியில் அந்தக் கடன் பெற்றவருக்கு/ கார்டுதாரருக்கு உள்ள மற்ற அனைத்து கடன்/கிரெடிட் கார்டு மற்றும் கணக்குகள் அனைத்தும் NPA என வகைப்படுத்தப்படும், மேலும், அந்தக் கணக்குகளில் தவறாமல் பேமெண்ட் செய்து வந்தாலும் கூட அந்தக் கடன்கள்/கிரெடிட் கார்டுகள்/கடன் வசதிகள் அனைத்தையும் திரும்பப் பெற்றுக் கொள்ளும் உரிமை வங்கிக்கு உள்ளது.

## S) பிராந்திய மொழிகளில் மிக முக்கிய விதிமுறைகளும், நிபந்தனைகளும்

பிராந்திய மொழிகளில் மிக முக்கியமான விதிமுறைகளும், நிபந்தனைகளும் பற்றிய விவரங்களுக்கு www.axisbank.com -ஐப் பார்வையிடவும், கிடைக்கும் மொழிகள் 1) மராத்தி 2) இந்தி 3) பெங்காலி 4) குஜராத்தி 5) மலையாளம் 6) தமிழ் 7) தெலுங்கு 8) கன்னடம்

இதன்மூலம், www.axisbank.com -இல் பிராந்திய மொழிகளில் இருக்கும் மிக முக்கிய விதிமுறைகளும் நிபந்தனைகளும், மிக முக்கிய விதிமுறைகளும், நிபந்தனைகளும் ஆங்கிலப் பதிப்பைப் பிரிதிநித்துவப்படுத்தும் உரை என்பதை கார்டுதாரர் ஒப்புக்கொள்கிறார் மற்றும் ஏற்றுக்கொள்கிறார்.

மிக முக்கிய விதிமுறைகளும், நிபந்தனைகளும் ஆங்கில மற்றும் பிராந்திய மொழிகளில் வழங்கப்பட்டுள்ள பதிப்புகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடு/சச்சரவு ஏற்படும் பட்சத்தில், அதன் ஆங்கிலப் பதிப்பே செல்லுபடியாகும் மற்றும் கார்டுதாரரைக் கட்டுப்படுத்தும் என்பதைக் கார்டுதாரர் ஒப்புக்கொள்கிறார் மற்றும் ஏற்றுக்க்கொள்கிறார்.

பிராந்திய மொழிகளில் கிடைக்கும் MITC -க்கான இணைப்புகள்:

மராத்தி - https://axisbank.com/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-marathi.pdf

இந்தி- https://axisbank.com/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-hindi.pdf

பெங்காலி - https://axisbank.com/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-bengali.pdf

குஜராத்தி - https://axisbank.com/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-gujarati.pdf

மலையாளம் - https://axisbank.com/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-malayalam.pdf

தமிழ் - https://axisbank.com/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-tamil.pdf

தெலுங்கு - https://axisbank.com/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-telugu.pdf

கன்னடம் - https://axisbank.com/docs/default-source/default-document-library/credit-cards/mitc/most-important-terms-and-conditions-for-axis-bank-credit-cards-kannada.pdf

## பொறுப்புத்துறப்பு:

வருமானம், இலாபம், வியாபாரம், ஒப்பந்தங்கள், எதிர்பார்த்த சேமிப்பு அல்லது நல்லெண்ணம் மென்பொருள் உட்பட எந்தவொரு உபகரணங்களின் பயன்பாடு அல்லது மதிப்பு ஆகியவற்றை இழப்பது உட்பட, ஆனால் அவை மட்டும் அல்லாமல், நேரடியாகவோ, மறைமுகமாகவோ அல்லது பின் விளைவாகவோ ஏதேனும் இழப்பு அல்லது சேதம், ஏதேனும் தாமதம், குறுக்கீடு, இடைநிறுத்தம் அல்லது வங்கியின் பெறுதல் மற்றும் செயல்படுத்துதல் கோரிக்கை மற்றும் பதில்களை உருவாக்குதல் மற்றும் திரும்பப் பெறுதல் செயலிழப்பு அல்லது ஏதேனும் தோல்வி, தாமதம், குறுக்கீடு, இடைநிறுத்தம், கட்டுப்பாடு அல்லது பயனரின் தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் எந்தவொரு சேவை வழங்குநரின் நெட்வொர்க் மற்றும் வங்கியின் அமைப்பின் செயலிழப்பு அல்லது ஏதேனும் ஒரு தகவல் அல்லது செய்தியை அனுப்புவதில் பிழை, பயனரின் தொலைத்தொடர்பு சாதனங்களின் செயலிழப்பு, குறுக்கீடு, இடைநிறுத்தம் அல்லது செயலிழப்பு, வங்கியின் அமைப்பு அல்லது எந்தவொரு சேவை வழங்குநரின் நெட்வொர்க் மற்றும் / அல்லது வசதியை வழங்குவதற்குத் தேவையான சேவைகளை வழங்கும் மூன்றாம் தரப்பினரின் செயலிழப்பு ஆகியவற்றுக்கு வங்கியோ, அதன் பணியாளர்களோ, முகவர்களோ அல்லது ஒப்பந்ததாரர்களோ பொறுப்பேற்க மாட்டார்கள். ஆக்ஸிஸ் வங்கி தனது தனிப்பட்ட சுய விருப்பத்தின் பேரில், தனது சேவைகள் தொடர்பாக, தேவைக்கேற்ப அல்லது அவசியமான வெளிப்புற சேவை வழங்குநர்/கள் அல்லது முகவர்/களின்சேவைகளை விதிமுறைகளின் அடிப்படையில் பயன்படுத்தலாம்.

• 21 வேலை நாட்களுக்குள் விண்ணப்ப படிவத்தின் நிலை பற்றி ஆக்ஸிஸ் வங்கி தெரிவிக்கும்.

• ஏதேனும் டீல்கள், பரிசுகள், வவுச்சர்களை வழங்குவதற்கோ, ரிவார்டு பாயிண்ட்களை ரெடீம் செய்வதற்கோ, கார்டை செயல்படுத்துவதற்கோ அல்லது ரத்து செய்வதற்கோ கார்டு CVV, பின், OTP அல்லது இன்டர்நெட் கடவுச்சொல்லை ஆக்ஸிஸ் வங்கி ஒருபோதும் கேட்காது அழைப்பு/மின்னஞ்சலில் வரும் அது போன்ற கோரிக்கைகளைப் புறக்கணிக்கவும். தொடர்பு கொள்ளும் முன்னர்

ஆக்ஸிஸ் வங்கியின் தொடர்பு எண்களை அதன் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

• எந்தவொரு ஆன்லைன்/இ-காம் பரிவர்த்தனைகளையும் தொடங்கும் முன்பாக, அந்த இணையதளம் மற்றும்/அல்லது போர்ட்டலின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளவும். உங்கள் பணத்தை மோசடி செய்யும் போலி இணையதளங்கள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்கவும்.

• வங்கி வழங்கும் கார்டு வாடிக்கையாளரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்கானதாகும். மூன்றாம் தரப்பினரின் சார்பாக அல்லது அவர்களின் நன்மைக்காக செய்யப்படும் பரிவர்த்தனைகளை வங்கி ஊக்குவிக்காது அல்லது ஆதரிக்காது.

• சர்வதேச பரிவர்த்தனைகளுக்கான வணிகர் ரீஃபண்டு/முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில், நாணய மதிப்பின் ஏற்ற இறக்கத்தால் ஏற்படும் வித்தியாசத்தை வாடிக்கையாளரே ஏற்க வேண்டும்.

**தொடர்பு கொள்ளும் முறைகள்**

**வாடிக்கையாளர் சேவை**

1860 500 5555 அல்லது 1860 419 5555 இந்தியாவில் உள்ள எந்தவொரு லேண்ட்லைன் அல்லது செல்போனிலிருந்தும் தொடர்பு கொள்ளலாம்

ஏஸ் கிரெடிட் கார்டுகளுக்கு: 1860 419 1919
பர்கண்டி பிரைவேட் கார்டுகளுக்கு: 1800 210 8888
பிரீமியம் கார்டுகளான விஸ்டாரா இன்ஃபினைட், ரிசர்வ், செலக்ட், அலியாஸ், மைல்ஸ் அண்ட் மோர் வேர்ல்டு செலக்ட் மற்றும் இன்ஃபினைட் கார்டுகளுக்கு, தொடர்பு கொள்க: 1800 419 0065

+91 - 22-27648000 இந்தியாவிற்கு வெளியிலிருந்து தொடர்பு கொள்ளலாம்

மின்னஞ்சல் முகவரி: axisbank.com/support
ஏஸ் கிரெடிட் கார்டுகளுக்கான மின்னஞ்சல் முகவரி: service.acecard@axisbank.com

LIC கார்டுகளுக்கு: 1800 419 0064
மின்னஞ்சல் முகவரி: axisbank.com/support

## குறை தீர்ப்பு /மேல் முறையீடு

பெறுநர்,
திரு. அசோக் சுனர் அவர்கள், நோடல் அதிகாரி

ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட், NPC1, 5-வது தளம், "ஜிகாப்ளெக்ஸ்", பிளாட் எண். I.T.5, MIDC, ஐரோலி நாலெட்ஜ் பார்க், ஐரோலி, நவி மும்பை - 400 708. மின்னஞ்சல் முகவரி: nodal.officer@axisbank.com, தொலைபேசி. 91-080-61865200. நேரம்: காலை 9:30 முதல் மாலை 5:30 வரை (திங்கள் முதல் வெள்ளி வரை)

காலை 9:30 முதல் மதியம் 2:00 வரை (சனிக்கிழமை), வங்கி விடுமுறை நாட்கள் தவிர

https://www.axisbank.com/docs/default-source/default-document-library/Customer-Compensation-Policy.pdf -இல் உள்ள வங்கியின் இழப்பீட்டுக் கொள்கைக்கேற்ப, குறைகளுக்குப் பொருந்தக்கூடிய இழப்பீடு வழங்கப்படும்.